
Koviloor Digital Library

பிள்ளையார் நோன்பின் தோற்றமும் வரலாறும்




ACC NO 38376

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ஆறு. அழகப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library



பிள்ளையார் நோன்பின் தோற்றமும் வரலாறும்



பதிப்பாசிரியர்

பேராசிரியர் ஆறு. அழகப்பன்

விலை ரூ. 20.00

முல்லை பதிப்பகம்

323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
தொலை.: 9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

Koviloor Digital Library

பதிப்புரை

கவிஞர் கண்ணதாசன் சிறுகூடல்பட்டியில் பிறந்து காரைக்குடியில் வளர்ந்து சென்னையம்பதியில் தமிழ் அன்னை அருள் பெற்று தமிழ்மக்களால் கவியரசர் என்று அழைக்கப்பட்டார். அவர் நகரத்தார் குல மாமணிகளில் ஒருவர். தாம் கவிஞராக இருந்தாலும் நகரத்தார் பெருமைகளைப் பாடி இக்குலம் 'எம்குலம் என்பேன்' என்று பெருமைப்படுகிறார்.

செட்டிநாடு, செட்டிநாடு விருந்தோம்பல், செட்டிநாட்டு உணவுகள், ஆபரணங்கள் முதலியன அனைத்து இனத்தினர்களுக்கும் பிடித்துப் போய் விட்டன. எந்த இனத்தார் உணவு விடுதி நடத்தினாலும் 'செட்டிநாடு ஹோட்டல்' என்று பெயர் சூட்டுகின்றனர்.

நகரத்தார் என்று தனி அடையாளங்களைக் காட்டக் கூடிய பிரிவுகள் அவர்கள் கோயில்கள், படைப்பு, பிள்ளையார் நோன்பு ஆகியன; உலக நகரத்தார்கள் அனைவரும் எந்த ஊர், எந்தக் கோயிலாக இருந்தாலும் ஒற்றுமையாகக் கூடக் கூடிய ஒரே ஒரு பண்டிகை பிள்ளையார் நோன்புதான்; இந்நோன்பு ஏன் எப்படி எவ்வாறு தோன்றியது என்று அறிய விரும்பி முத்தையவேள் நற்பணி மன்றம், ஓர் ஆய்வுப் போட்டியை அறிவித்தது. நகரத்தார் குல வரலாறுகளை ஆழமாகவும், அறிவுசார்ந்த நிலையிலும் அறிந்த அறிஞர்களின் கருத்துக்களுடன், தேர்வு செய்யப் பெற்ற கட்டுரைகளையும் இங்கு வெளியிட்டுள்ளோம். பிள்ளையார் நோன்பு பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பும் நகரத்தார்களுக்கு இந்நூல் ஓர் புதுமை. இத்தொகுப்பு வருங்கால சந்ததியினருக்கு ஒரு வரலாற்றுப் பெட்டகம்.

குறுகிய காலத்தில் இந்நூலை அச்சிட்டுக் கொடுத்த சிவகாசி ஸ்ரீபாலசுபம் பிரிண்டர்ஸ், இந்நூல் உருவாகும் வேளையில் உடனிருந்து உதவிய ஆத்தங்குடி கா.சந்திரசேகர் ஆகியோருக்கும் நன்றி.

பேராசிரியர் ஆறு. அழகப்பன்
பதிப்பாசிரியர்

வெளியிட்ட நாள்
பிள்ளையார் நோன்பு நாள் 18.12.2012

Koviloor Digital Library



பிள்ளையார் நோன்பு

பேராசிரியர் **தே. சொக்கலிங்கம்,**
சிறப்பாசிரியர், பூச்சரம்,
நகரத்தார் சமூக இலக்கிய மாத இதழ்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்னும் செட்டியார்கள் சிறப்பாகக் கொண்டாடும் சமயச்சடங்குகளில் பிள்ளையார் நோன்பு குறிப்பிட்ட ஒன்று. தமிழகத்தில் வேறு எந்த சாதியாரும் பிள்ளையார் நோன்பு கொண்டாடுவதில்லை. நகரத்தார்கள் தொன்று தொட்டுப் பிள்ளையாரை வணங்கி வருகின்றனர்.

நகரத்தார்களின் பிள்ளையார் வழிபாடு

நகரத்தார்கள் நாள்தோறும் காலையில் நீராடிப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று பிள்ளையாரை வழிபட்டுச் சிதறு தேங்காய் அடித்து வருவர். அவர்கள் குடியேறிய ஊர்களில் பிள்ளையார் கோயில் கட்டி ஊருணி அமைப்பர். இளையாத்தக்குடிக் கோயிலில் ஒன்பது உட்பிரிவுகள் உள்ளன. இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எனத் தனியே ஒரு பிள்ளையாரைக் கொண்டாடி வருகின்றனர். அப்பிள்ளையாருக்குக் கோயில் கட்டியும் அவருக்கு முன்னே ஊருணி அமைத்தும் உள்ளனர். இளையாத்தக்குடி நகரத்தார் 'கலங்காத கண்ட விநாயக'ரையும் வழிபடுகின்றனர். இவ்வாறு நகரத்தார்கள் விநாயகப் பெருமானைக் கண்கண்ட கடவுளாகக் கொண்டாடி வருகின்றனர்.

நகரத்தார்கள் தங்கள் குடும்பத் திருமணத்தில் மணமகளுக்கு நாத்தனார் சடங்கு செய்வர். அந்தச் சடங்குத் தட்டில் விநாயகரை வைத்துச் சடங்கு செய்வது வழக்கம். மணமகளுக்குச் சீதனம் சீர்வரிசை செய்யும் நகரத்தார், வெள்ளியால் செய்த சிறிய விநாயகர் சிலையைக் கொடுப்பர். எல்லா வட்டகை நகரத்தாரும் தங்கள் மகளுக்குப் பொங்கலுக்குப் பொங்கப்பானை கொடுப்பது போலப் பிள்ளையார் நோன்புக்கும் சீர் செய்வர். இவ்வாறு நகரத்தார் வாழ்வில், பிள்ளையார் தனி முதன்மை பெற்றிருக்கிறார். வழிபாட்டில் மற்றுமின்றி வாழ்க்கையிலும் பிள்ளையார் முக்கியத்தும் பெறுகிறார்.

பிள்ளையார்க்கு நோன்பு

பிள்ளையாரைத் தனிச்சிறப்புடன் கொண்டாடும் நகரத்தார்கள், பிள்ளையாருக்கு என்று வீட்டில் கொண்டாடும் நோன்பு பிள்ளையார் நோன்பாகும். இதனைப் பெண்கள் 'இழைஎடுக்கிறது' என்றும

'பிள்ளையார் நோன்பு' என்றும் கூறுவர். 'பிள்ளையார் தம்பி' என்றும் சிலர் இதனைச் சொல்லுவதாகவும் கூறுகின்றனர். எனவே இது முருகனை நோக்கியது என்றும் சிலர் எழுதியுள்ளனர். தொன்று தொட்டு நகரத்தார்கள், பிள்ளையார் நோன்பைக் கொண்டாடி வருகின்றனர். சமணர்களாக இருந்த நகரத்தார்கள் சைவர்களாக மாறிய போது மேற்கொண்ட நோன்பு, அன்று தொட்டு இன்று வரை கொண்டாடப்படுகிறது. விநாயகராகிய பிள்ளையார்க்கு உரிய நோன்பு பிள்ளையார் நோன்பாகும்.

கார்த்திகை சூள் பிடி முடிந்ததும் தொடர்ந்து இருபத்தொரு நாள்களும் விரதமாக நகரத்தார்கள் இருந்திருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்களுடைய சைவ சமப்பற்றுதலை இந்நோன்பின் மூலம் உரப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இஃது ஆண்டுதோறும் பிராமணர்கள் பூணூல் போடுவது போன்று இவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வோரிழையாக எடுத்து இருபத்தோர் இழையைச் சேர்த்து வந்திருக்கின்றனர்.

நோன்பு கொண்டாடும் இடம்

விசேடங்கள் செய்யும் அறையே, நகரத்தார்கள் பிள்ளையார் நோன்பு கும்பிடும் இடமாகும். அந்த வீட்டைத் தூசி அடித்து மெழுகித் தூய்மை செய்வது இன்றியமையாதது. அந்த வீட்டில் கிழக்கு நோக்கிய வண்ணம் திருவிளக்கு (நிலை விளக்கு என்றும் குத்து விளக்கு என்றும் இதனைக் கூறுவர். இது வெண்கலத்தாலோ வெள்ளைப்பித்தளையாலோ வெள்ளியாலோ செய்யப்பட்டிருக்கும்.) அறையின் சுவரை ஒட்டிப் போடப்பட்டிருக்கும் கோலத்தின் மீது இருக்கும். எப்போதும் போல இந்த விளக்கில் இரண்டு திரி ஏற்றப்பெற்றுச் சோதி ஒளிவீசும்.

தும்பு பிடித்துக் கோலம் போடுதல்

நகரத்தார் வீடுகளில் எந்தச் சிறப்பு நிகழ்ச்சியானாலும் (திருமணம் புதுமை, குடிபுகுதல்) தும்பு பிடிப்பது வழக்கம். தும்பு பிடித்தாலேயே விசேடம் தொடங்கிவிட்டது என்பது கருத்து. அறையின் உள்சுவரிலும் வாயிற்படிச் சுவரிலும் தும்பு பிடிப்பர். வீட்டுக்குரிய தலைவியும் மருமகளும் தும்பு பிடிப்பர். ஏட்டோலைக் கட்டிலுள்ள நூல் கயிற்றை ஒருவர் பிடிக்க இன்னொருவர் கோலமாவால் வரைவர். மேலே ஒரு முக்கோணமும் அம்முக்கோணத்தின் பெரிய பக்கத்தில் ஒரு செவ்வகமும் வரையப் பெறும். பிற விசேடங்களில் தும்பு பிடித்தபின்பே கோலமிடப்பெறும். பிள்ளையார் நோன்பில் தும்பு பிடிக்கு முன்னரே கோலம் போட்டு விடுகின்றனர். நிலை விளக்கிற்கு முன் நடுவீட்டுக் கோலமிடப்பட்டிருக்கும். இக்கோலத்தில் பிள்ளையார் வீற்றிருப்பார். பிள்ளையாருக்கு வலப்பக்கத்தில் சற்று முன்னே தள்ளி குடும்பத்தின் பெரிய செட்டியார் உட்காருவதற்குப் பெண்கள் கோலம் போடுவர். அக்கோலத்தைத் தொடர்ந்து வரிசையாகக் குடும்ப உறவினர்கள்

Koviloor Digital Library

எண்ணிக்கைக் கேற்பக் கோலம் தனித்தனியே போடப்பெறும். இக்கோலத்தின் மீது புதிய தடுக்கைப் போட்டு ஒவ்வொருவரும் உட்காருவர். பெண்களோ பெண்குழந்தைகளோ அறைக்குள் போடப்பட்ட தடுக்கில் உட்காருவதில்லை.

பலகாரம் செய்தல்

இதற்கிடையே பெண்டுகள் கருப்பட்டிப் பணியாரம், வெள்ளைப் பணியாரம், வடை, இனிப்புச் சீடை (ஆலங்காய்), முறுக்கு, அதிரசம், மணகோலம், பொரி வகைகள் ஆகியவற்றைச் செய்து வைத்திருப்பர். எல்லாப் பொருள்களும் வெள்ளிக் கிண்ணத்தில் வைத்துப் பிள்ளையாருக்கும் படைக்கப்பட்டிருக்கும். இவற்றைத் தனியே வைத்திருப்பர்; வழிபாடு தொடங்கிய பின் இவற்றை விநாயகர் முன் படைப்பர். இவற்றால் விநாயகருக்கு அபிஷேகமும் செய்வர்.

ஆவிரம் பூச்செண்டு வைத்தல்

முதற்கண், பெண்கள் சங்கை எடுத்து ஊதுவர்; திருவிளக்கு ஏற்றப்பெறும். குடும்பப் பெரியவர் தலைப்பாக்கட்டிக் கொள்வார். குடும்பத்திலுள்ள இளஞ்சிறுவர் இவருக்குத் தலைப்பாக்கட்டி அவர்கள் இருவரையும் கொண்டு சாமி கும்பிடும் வாசற்படியிலிருந்து ஆவிரம்பூச்செண்டைக் கையில் நேராகப் பிடித்துக் கொண்டு அறைக்குள் கூட்டிவருவார் அல்லது கொண்டு வந்து வைக்கச் செய்வர். இரண்டு பூச்செண்டுகளையும் விநாயகருக்கும் விளக்குக்கும் இருபுறமும் சுவரில் சாத்துவர். இவ்வாறு ஆவிரம் பூச்ண்டு வைப்பதே சுவாமி கும்பிடுவதன் தொடக்கமாகும்.

வழிபாடு தொடங்கல்

இதன்பின் குடும்ப உறவுக்கேற்ப வயது வரம்பின் படி ஆண்கள் அனைவரும் வரிசையாகத் தடுக்கில் அமர்வர். திருவிளக்கின் அருகில் பிள்ளையார் இருப்பார்; அவர் முன் நிவேதனப் பொருள்களை வைத்து வீட்டுக்குப் பெரியவர் (குடும்பத்தலைவர்) விளக்கின் முன் தடுக்கில் உட்கார்ந்திருப்பார். இவர்தான் இழை எடுத்துக் கொடுப்பவர். இவருக்கு முன்னே நுனி வாழையிலையை விரித்துவைத்திருப்பார். இவ்வாழையிலையின் நுனியில் வெள்ளி அகல் விளக்கு நெய்யூற்றி ஏற்றித் தீபம் ஒளிவீசும்.

இழை எடுத்தல்

குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அமர்ந்தபின் குடும்பத் தலைவர் துணியிலிருந்து ஒவ்வோரிழையாக இருபத்தோரிழை எடுப்பார். (சிலர் முன்னரே எடுத்து வைத்துக் கொள்ளுகின்றனர்.) அவர் இழை எடுக்கும் போது ஒரு முனையிலிருந்து மறுமுனை முடிய இழை அறுபடாமல் எடுத்தல் வேண்டும்; கூடுதலாகவே குறைவாகவே இழை எடுப்பதில்லை.

Koviloor Digital Library

விநாயகர் அகவல் படித்தல்

இழை எடுக்கும் போது குடும்பத்திலுள்ள சிறுவர் விநாயகர் அகவலைப் படிப்பர். மூன்று முறை விநாயகரகவலைப் படிப்பர். பழைய காலத்தில் விநாயகரகவலையும் வேழ முகத்தையும் படிப்பது கட்டாயமாக இருந்தது. சரசுவதி சிந்தனை போன்ற சிறு நூல்களும் படிக்கப்பெறும். இச்சிறு நூல்களைச் 'சில்லரைக் கோவை' என்ற தொகுப்பில் காணமுடியும். இந்நூலை வைத்தே மேற்படி நூல்களை பிள்ளையார் நோன்பில் படிப்பர்; எனவே இச்சிறுநூலுக்கு வெல்வெட்டுத் துணியில் உறைதைத்தும் போட்டிருப்பர். ஒவ்வொரு பிள்ளையார் நோன்பிலும் இந்நூலை எடுத்துப்படிப்பர். **குடும்பத் தலைவரே விநாயகர் அகவல், வேழமுகம் படித்த பின்பு நூலிழையை எடுத்தலுமுண்டு.**

இழைகளின் எண்ணிக்கை

இழை எடுப்பவர், இழையை எடுத்துத் தன் மடியிலோ வாழை இலையிலோ வைத்துக் கொள்ளுவார். இருபத்தோரு இழைகள் எடுத்து ஒன்று சேர்த்துப் பின் உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப இழையை (நூலை) நறுக்கிக் கொள்ளுதல் வழக்கம். இழையெடுத்துக் கொடுக்கும் தலைவருக்கு முதற்கண் ஒன்றும் நிறைவில் ஒன்றும் ஆக இரண்டு இழை உண்டு; **ஒன்று கூடுதலாகப் பிடிக்க வேண்டும்.**

முதற்கண் இழை எடுத்துக் கொடுப்பவர் சுவாமி தரிசனம் செய்து தீபத்துடன் ஓரிழையை வாயில் போட்டுக் கொள்வார்; பின் குடும்பத்தினர் ஒவ்வொருவராகப் பெரியவரைக் கும்பிட்டு இழையைப் பெற்றுக் கொள்வர். கருவுற்ற பெண்களுக்கு ஓரிழையும் கருவிலுள்ள குழந்தைக்கு ஓரிழையும் என்று இரண்டு இழை கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பெறும். குடும்பத்திலுள்ள கைம் பெண்களுக்கு இழை கொடுப்பதில்லை.

பிள்ளையார் பிடித்தல்

கருப்பட்டி மா அல்லது வாழைப்பழம் அல்லது திரட்டுப் பால் ஆகிய மூன்றில் ஒன்றில் கூம்புவடிவமாகப் பிள்ளையார் பிடிப்பர். கருப்பட்டிமாவில் பிள்ளையார் பிடிப்பதே பெரும்பான்மை வழக்கம். இழை ஒவ்வொன்றையும் நெய்யில் தோய்த்துப் பிள்ளையார் நடுவில் வைத்துக் கூம்பு வடிவமாகச் செய்வர். (நடுவில், மஞ்சள் சாணம் போன்றவற்றைக் கூம்பாகப் பிடித்துப் பிள்ளையார் என்று சொல்லுவதால் கூம்பாகப் பிடிப்பதைப் பிள்ளையார் என்றனர்.) இவ்வாறு பிடித்த பிள்ளையார்களை வாழை இலையில் வரிசையாக வைத்திடுவர்.

ஒவ்வொருவருவராக வந்து விநாயகப் பெருமானையும் பெரியவரையும் வணங்கிடுவர்; திரியுள்ள பிள்ளையாரைப் பிள்ளையார்

Koviloor Digital Library
நோன்பு விளக்கில் ஏற்றிச் சோதியுடன் வணங்கி நிற்பவருக்குப் பெரியவர் கொடுப்பார். **வணங்கியவர் அதைப்பணிவுடன் வாங்கிச் சோதியுடன் வாயில் போட்டுக் கொள்ளுவார்;** சிலர் நெருப்பை அணைத்து விட்டுத் தின்பர். அனைவரும் இழை எடுத்துக் கொண்டபின் குடும்பப் பெரியவர் மீண்டும் ஓரிழை எடுத்துக் கொள்வார். இதனுடன் பிள்ளையார் நோன்பு நிறைவு பெறும். **அவ்வப்போது சங்கு ஊதுவர்.**

கொண்டாடும் நாள்

கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சம் முதல் மார்கழித் திங்கள் சுக்கில பட்சம் சஷ்டி வரையில் இருபத்தொரு நாள்கள், பிள்ளையார் நோன்பு பின்பற்றப்படும். 'சட்டி (சஷ்டி) தொட்டுச் சதயம் விட்டு' என்ற பழமொழி இந்த உண்மையைத் தெளிவுபடுத்தும். பிள்ளையார் நோன்பைச் சஷ்டிதிதியும் சதய நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளிலேயே கொண்டாட வேண்டும். சிவமைந்தர்களான கணபதியையும் முருகனையும் ஒருங்குவழிபடுமாறு பிள்ளையார் நோன்பு சதயமும் சஷ்டியுமாக அமைகின்றது; எனவே இந்நோன்பைப் பிள்ளையார் நோன்பு என்றும் குமார சஷ்டி என்றும் விநாயக சஷ்டி என்றும் போற்றுகின்றனர்.

திருக்கார்த்திகை முதலாக

திருக்கார்த்திகையிலிருந்து இருபத்தொரு நாள்கள் பிள்ளையார் நோன்புக்குக் கணக்கிடப்படுகின்றன. கார்த்திகை நகரத்தார்களுக்கு மிக இன்றியமையாத நாள். இது பற்றி வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியார் எழுதுவதாவது:

"பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஆண்பிள்ளைகளைக் கார்த்திகைத் திங்கள் நாளில் வீடுகளில் வாழை நட்டுத் திருவிளக்கேற்றி விநாயகர் கோயிலுக்கோ அன்றிச் சிவாலயத்துக்கோ குதிரையேற்றிச் சென்று (சொக்கப்பான் கொளுத்தி). சோதிதரிசனம் செய்து வரச்செயவர். இதை அரைக்கலியாணம் என்றும் 'சூள்பிடி' என்றும் சொல்வார்கள். சூள்பிடி என்பது அணையாதலாந்தல் (Latern) விளக்குகள், மெழுகுத்திரி விளக்குகள், முதலியன இல்லாத அக்காலத்தில் ஒருவகைக் கொட்டு மரத்தில் (சூந்தமரம்) முழுவதும் பிளக்காமல் சிறிது சிறிதாகக் குத்தி வலைஞர்களால் செய்யப்படுவது. இதைக் குதிகைக்கு முன் பிடித்துக் கொண்டு செல்வார்கள். இதனாற்றான் இந்த விசேஷத்திற்குச் 'சூள்பிடி' என்று பெயராயிற்று. எத்தனையோ அற்புதமான பேரொளி விளக்குகள் வந்தும், அவற்றை உபயோகித்து வரும் இந்நாகரிகக் காலத்திற்குக் கூட அந்தச் 'சூள்பிடி' என்ற பெயர் மாறவில்லை. சூள்பிடியைத் தற்பொழுது வெண்கலத்தால் கோல்வடிவில் செய்து நெருப்புக் கொண்டு சொக்கப்பான் கொளுத்துகின்றனர்." (பக்34-35).

Koviloor Digital Library

சொக்கப்பான் கொளுத்தல்

ஒவ்வொரு நகரத்தாரும் சோதியைத் தரிசனம் செய்து வீட்டிலும் சோதியை ஏற்றி வழிபடுகின்றனர். நடுவீட்டில் வாழைத் தண்டை நிறுத்தி அதில் இருபத்தொரு குழிவிளக்குள் அமைக்கப்பட்ட செவ்வகமான தட்டைச் செருகிவைத்திருப்பர். எல்லாவற்றிலும் விளக்கு எரியும். நடுவீட்டில் சுவாமி கும்பிட்ட பின் சிறுவன் தலையில் குல்லாய் அணிந்து கொண்டு மாமக்காரர் கூட வரக் குதிரையில் பிள்ளையார் கோயிலுக்கு வருவான். சொந்தக்காரர்களும் பங்காளிகளும் உடன் வருவர். கோயிலில் சுவாமி தரிசனம் செய்து கையில் சூள்பிடி கம்பை எடுத்துக் கொண்டு கோயிலுக்கு முன் அன்று கட்டப்பட்டிருக்கும் சொக்கப்பானைக் கொளுத்துவான். ஒரே நாளில் பலர் வந்தால் பலரும் கூட்டாகச் சொக்கப்பானைக் கொளுத்துவர்; கொளுத்திமுடியும் வரை அனைவரும் சொக்கப்பானைத் தரிசித்துப் பின் எரிந்த நீற்றை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்வர். இச்சடங்கில் பஞ்சாங்கக்கார அய்யருக்கு எந்த வேலையுமில்லை.

வரலாற்றுண்மை

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பற்றி எழுதிய எட்கர் தர்ஸ்டன் திருக்கார்த்திகை, திருவாதிரை பற்றியும் தன்னூலில் எழுதியுள்ளார். நகரத்தார்களிடையே திருக்கார்த்திகை, திருவாதிரை என்ற சடங்குகள் செய்வது இன்று இல்லை. நகரத்தார்களின் அயல் நாட்டுத் தொடர்புகள் குறைந்து பொருளாதார வசதி குன்றியமையால் இன்று இவை செய்யப்பெறவில்லை; இதனால் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே, இந்தச் சடங்குகள் பற்றிய விவரங்கள் தெரியும். எட்கர் தர்ஸ்டன் கி.பி. 1907 இந்நூலை வெளியிட்டுள்ளார். ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு முன் தனக்குக் கிடைத்தவற்றை அவர் நூலில் பதிவு செய்திருக்கிறார். அந்த விவரம் தரப்பெறுகிறது.

திருமணத்திற்கு முன் நாட்டுக்கோட்டைச் செட்டி இளைஞர்கள் அனைவரும் சூப்பிடி (சூர்ப்பிடுதல் = சுற்றியாட்டுதல்) என்ற சடங்கினை நடத்துதல் வேண்டும். கார்த்திகைத் திங்கள் திருநாளன்று அவன் குதிரை மீது ஏறிப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்வான். அங்கு வழிபாடு நிகழ்த்தியபின் ஒருபையில் போடப்பட்டுள்ள தணலை நீண்ட கயிற்றோடு பிணைத்துக் கட்டித் தலைக்கு மேலே சுழற்றுவான். கோயிலுக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சொக்கப் பனையினை அவன் கொளுத்திய பின் அதன் சாம்பலை அவன் நெற்றியில் பூசுவர். அவன் வீட்டிற்குத் திரும்பும் போது வழியில் உள்ள நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் வீட்டு வாசல்களிலும் (பங்காளி), அவன் வீட்டுக்குத் திரும்பியபின் அவன் வீட்டு வாசலிலும் அரிசி மாவிளக்கால் (ஆலத்தி எடுத்தலையே குறிக்கிறார்) அவனுக்கு ஆர்த்தி எடுப்பர். இதே போன்று சிறுமியரும் தங்கள் திருமணத்திற்கு முன் திருவாதிரை என்ற

Koviloor Digital Library

சடங்கினை நிகழ்த்துதல் வேண்டும். ஆருத்ரா தரிசனத்தன்று அவளைக் குளிக்கச் செய்து அலங்கரிப்பர். அதுவரை அணிந்து வந்த கண்ணாடிப் பாசிமணி மாலைக்குப் பதிலாகத் தங்க மணிகளாலான கழுத்துச் சங்கிலி அணிவிக்கப்படுவாள். கையில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தை ஏந்தியவளாக அத்தகைய சடங்குகளைத் தன்னைப்போலவே நிகழ்த்தும் பெண்களின் வீடுகளுக்குச் சென்று பின்வருமாறு குரல் (பாடுவாள்) கொடுப்பாள்:

'ஆடி வந்த எனக்கு அவரைக் காய் படையுங்க!
பாடி வந்த எனக்குப் பாடரவரை படையுங்க!
சொல்லி வந்த எனக்குச் சுரைக்காய் படையுங்க!'

அந்த வீட்டார் சமைத்து வைத்திருக்கும் பலவகைக் காய் கறிகளையும் அவளுக்குக் கிண்ணத்தில் இடுவர். இந்தப் பாட்டை வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியார் நகரத்தார் வழக்கில் உள்ளபடி பின் வருமாறு அவர் நூலில் காட்டுகிறார்.

'ஆடி ஆடிவாரோம் அவரைக்காய் போடுங்கள்
பாடிப்பாடி வாரோம் பாடரவரங்காய் போடுங்கள்
கூடிக்கூடி வாரோம் கொத்தவரங்காய் போடுங்கள்'

என்று பாடுவர் (ப.35). அன்று மணமான பெண்கள் வீட்டில் தோசை வார்த்து (திருவாதிரை செய்யும் வீட்டிலேயே திருவாதிரைத் தோசை சுட்டு வந்தனர்) அதில் இரும்புமயிர்க் கோதியால் (சத்தகம்) துளையிட்டு அதனையும் மேற்கண்டவாறு பாடிவரும் பெண்களுக்கு இடுவர். இத்தகைய பொருள்களைப் பாடிச் செல்லும் ஒருத்தி பெறவில்லையானால் அதனைத் தனக்கு நேர்ந்த பெரிய இழிவாகக் கருதுவாள் (பக். 271-274)

இளைஞர்க்குரிய சடங்கு

நகரத்தார்கள் திருக்கார்த்திகை அன்று விநாயகர் கோயிலுக்கு வருதலும் சொக்கப்பனை கொளுத்தலும் பின் தலையைச் சுற்றி மூன்று முறை வட்டமாகத் தணலைச் சுற்றதலும் செய்வர். (சிலர் பையில் போட்டுச்சுற்றுவர் என்றும் சூந்தக் கம்பை வாங்கிச் சுற்றுவர் என்றும் கூறுகின்றனர்.) பின் சொக்கப்பனையாகிய அக்கினி தரிசனம் முடித்து அதிலுள்ள நீற்றை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்வர்; கணபதி ஓமத்தில் இரட்சையணிந்து கொள்வது போலச் சாம்பலை நெற்றியில் குழைத்து அணிந்து கொள்வதுமுண்டு.

இச்சடங்கின் மூலம் சமணர்களாக இருந்த நகரத்தார்கள் சைவர்களாகினர். பல்வேறிடங்களுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்ற இவர்கள், திருவண்ணாமலையில் சமணத்தைப் புறக்கணித்துச் சைவ சமயம் புகுந்தனர். இஃது அப்போது மேற்கொள்ளப்பட்ட சடங்கு ஆகும்.

Koviloor Digital Library

பெண்டிர்க்குரிய சடங்கு

இவர்களைச் சமயமாற்றம் செய்தவர் **மாணிக்கவாசகர்** ஆவார். இதற்கு மேலும் ஆதாரங்கள் வேண்டும். கார்த்திகைச் சூப்பிடி, திருவண்ணாமலை தீபதெரிசனம் எனின் திருவாதிரைப் புதுமை பெண்களுக்குரிய பாவை நோன்பாகும். இரண்டும் திருவண்ணாமலைத் திருத்தலத்துக்குத் தொடர்புடையன. ஒன்று தீபதெரிசனம்; இன்னொன்று பாவை நோன்பு. திருவெம்பாவை மாணிக்கவாசகரால் திருவண்ணாமலையில் பாடப் பெற்றது என்பர் கடவுள் மாமுனிவர். (திருவாதவூரடிகள் புராணம் - திருவம்பலச் சருக்கம். 383-385) நகரத்தார்களின் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் செய்யும் இச்சடங்குகள் திருவண்ணாமலைத் தொடர்புடையன. திருவண்ணாமலையில் சைவ சமயத் தொடர்பு பெற்ற இவர்கள், தில்லையில் சிவதீக்சை பெற்றனர். நகரத்தார்களுடன் ஈழத்திலிருந்து வந்திருந்த பௌத்தர்களும் சிதம்பரத்தில் சைவர்களாயினர். (விநாயகர் விரதம் - காந்தளகம்) இதனால் ஈழ நாட்டிலுள்ள சிலரிடம் பிள்ளையார் நோன்பு கொண்டாடும் வழக்கமுள்ளது.

நோன்புக் காலம்

கார்த்திகைத் தீபதெரிசனம் முடித்த நகரத்தார்கள் இருபத்தொரு நாள் நிறைவேறிய பின் இருப்பத்திரண்டாம் நாள் பிள்ளையார் நோன்பு கொண்டாடிச் சைவராயினராதல் வேண்டும். இந்த இருபத்தொரு நாளும் நகரத்தார்கள் நோன்பாக இருந்து சிவ சிந்தனையுடன் விளங்கினர். நாளொன்றுக்கு ஓரிழை மேனி இருபத்தொரு நாளுக்கு இருப்பத்தோர் இழை எடுத்தனர்; ஒவ்வொரு நாளும் ஒவ்வோரிழையாக எடுக்கப் பெற்றது. இன்று இவ்வழக்கம் நின்று போய், ஒரே நாளில் இருபத்தோரிழையையும் எடுக்கின்றனர். சிலர் நூலாக வாங்கியும் இருபத்தோர் இழையைத் தொகுத்துக் கொள்ளுகின்றனர்.

சிவ வழிபாட்டின் தொடக்கம்

சிவ வழிபாட்டின் தொடக்கமாகவும் பிள்ளையார் வழிபாடு அமைகிறது; அன்றி விநாயகரும் சிவபரம் பொருளே அவர் ஓம் எனும் மூலப்பொருளாய்ப் பிரணவமாய்த் திகழ்கிறார். பல குடும்பங்களில் பிள்ளையார் நோன்புக்கு மறுநாள் பூவுக்குப் படைத்து நோன்பை நிறைவு செய்கின்றனர். ஆடவர்க்குக் கார்த்திகை போலப் பெண்களுக்குத் திருவாதிரை நோன்பு. கழுத்துருவின் சில உருக்களை எடுத்துக்கோத்துக் கட்டி மார்கழித் திருவாதிரையில் இந்நோன்பைத் திருவாதிரைப் புதுமை ஆதிரையை என்று கொண்டாடுகின்றனர். இதனை, "ஆதிரையை கும்பிடுவது" என்பர்.

Koviloor Digital Library

நகரத்தார்கள் திருமணத்தில் கழுத்துருவை இரட்டை வடமாகக் கட்டுவர்; அதிலுள்ள பதினாறு உருப்படிகளை எடுத்து ஒத்தவடமாகக் கட்டுவது வழக்கம்; அதனால் இதனைச் சிலர் '**அரைக்கலியாணம்**' என்பர்.

ஆதிரை நோன்பா?

மணிமகேலை 'ஆதிரை' என்ற வணிகர் குலப் பெண்ணைப் பற்றிக் கூறுகிறது. இவள் கற்பரசி; கோவலன் - மாதவி மகளான மணிமேகலை, அமுதசுரபி என்ற அரிய பிச்சைப்பாத்திரத்தைப் பெற்றாள்; அப்பாத்திரத்தில் முதன் முதல் பிச்சையிட வேண்டியவள் ஒரு கற்பரசியேயாம். அவளே ஆதிரை. அவளை அடிப்படையாகக் கொண்டு இந்நோன்பு கொண்டாடப்படுவதாகச் சிலர் கருதுகின்றனர்; மணிமேகலையில் வரும் ஆதிரைக்கும் திருவாதிரை நோன்புக்கும் தொடர்பில்லை.

சிவ வழிபாடு

திருவாதிரை, சமணர்களாக இருந்த பெண்களுக்குச் சைவர்களாக மாற ஏற்படுத்திய நோன்பாகும். பெண் திரள்வதற்கு முன் (ருதுவாகுமுன்) இதனைச் செய்தல் வேண்டும். ஆதிரை நட்சத்திரம் சிவபெருமான் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்ய உருவங்கொண்ட நாள். இந்நாளில் சிவன் கோயில்களில் பஞ்ச கிருத்திய உற்சவம் நடைபெறும். பெண்கள் திருவாதிரையன்று சிவாலயமுள்ள இடங்களில் நடராசப் பெருமானையும் சிவாலயமில்லாத இடங்களில் விநாயகப் பெருமானையும் அணிகலன் பூண்டு சென்று தொழுது வருவார்கள் (வயிநாகரம் ப.35). அன்று திருவாதிரை நட்சத்திர தரிசனமும் செய்வர். வணிகர் குலத்தைச் சார்ந்த காரைக்காலம்மையார், சிவபெருமானுடைய திருக்கூத்தை (நடராசப் பெருமானை)ப் புகழ்ந்து போற்றிப்பாடுவதும் சிவபெருமான் ஆற்றிய ஐந்தொழில்களை விரிவாகப்பாடுவதும் இந்நோன்புடன் ஒப்பு நோக்கி ஆராயத்தக்கவை.

சமயம் மாற்றம்

நகரத்தார்கள் மாணிக்கவாசகராலோ அல்லது அவர் குழுவைச் சார்ந்தவராலோ சைவர்களாக மாற்றம் பெற்றனர். இவ்வணிகக் குழுவினர் திருவண்ணாமலைக்கு வந்தபோது இச்சமய மாற்றம் நிகழ்ந்தது. சோதி தரிசனத்தின் மூலம் சிவதரிசனம் பெற்று நகரத்தார்கள் சைவர்களாயினர். கார்த்திகைத் தரிசனம் முடிந்த பின் (சோதியைத் தரிசித்த பின்) பிள்ளையார் நோன்பு (படம்) அன்று பிடிக்கும் பிள்ளையார் அண்ணாமலையின் வடிவமேயாகும்.

பிள்ளையாரின் உச்சியில் உள்ள திரியில் ஒளியை ஏற்றி (நெருப்பு வைத்து) கார்த்திகை சோதியைத் தரிசித்து நகரத்தார்கள் இழையை விழுங்குகின்றனர். ஒவ்வோராண்டும் தங்கள் சமய உணர்வை நகரத்தார்கள் இந்நோன்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். கார்த்திகை சோதி தரிசனம் செய்வது, நகரத்தார் இளைஞன் வாழ்க்கையில் ஒரே ஒருமுறை நிகழ்வது; இழையெடுத்துச் சோதி தரிசனம் செய்வது (பிள்ளையார் நோன்பு) ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்வது.

வயிற்றுக்குணவு

மனித உடலில் ஆறாதாரங்களைச் சுட்டுவர். ஆறு ஆதாரங்களில் நாபிப்பிரதேசத்தில் சுவாதிட்டனத்தின் மேலாகப் பத்திதழ்த் தாமரை வடிவுடையதாகக் கருதப்படும் இடம் மணிபூரகம். ஆறாதாரங்களுள் திருவண்ணாமலை மணி பூரகத்திலிருத்தலம். "மனிதஉடலைப் பொறுத்தவரை மணிபூரகம் என்பது வயிற்றைக் குறிக்கும். வயிற்றுக்காகத்தான் இந்த உலகமே இயங்குகிறது. எனவே ஒட்டு மொத்த உலக இயக்கமும் அண்ணாமலையாருக்குள் அடங்கும்" (தினமலர் நவம்பர் 2005). திருவண்ணாமலை மணி பூரகத்தலம் - வயிறு அதனைக் கருதியே அத்தலம் நிறைவு பெறப் பல்வகைப் பலகாரங்களும் மாவால் செய்த பிள்ளையாரும் பிடித்து நகரத்தார்கள் பிள்ளையார் நோன்பு கொண்டாடுகின்றனர். அக்கினியில் பல்வேறு தானியங்கள் பொரியும். அதனால் இந்த வழிபாட்டில் பல்வேறு பொரிகளும் படைக்கப்படுகின்றன. நெற்பொரி 'லாஜபுஷ்பம்' என்னும் வேள்வியின் பயன்படுத்தப்படுவது. இஃது ஆன்மா அணையாது; தெய்வத்திற்கு ஆன்மாவைக் காணிக்கை ஆக்குவதாகக் காட்டுவது. ஆகையால்தான் திருவண்ணாமலையைக் களமாகக் கொண்டு நோன்பை இவ்வாறு கொண்டாடுகின்றனர்.

சமயமாற்றச் சடங்கு

ஒருவர் பிற சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய போது என்னென்ன சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தெரியவில்லை. திருநாவுக்கரசர் சமணராக இருந்து சைவராகிய போது, அவருடைய குடும்பத்தைச் சார்ந்த திலகவதியாரே (அக்கா), அவரைச் சைவராக்கினார். சூலை நோயால் வாடிய திருநாவுக்கரசரைத் திலகவதியார் திருவதிகை திருவீரட்டத் திருக்கோயிலுக்குள் புகுவதற்காகக் கயிலைப் பிரான் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார். (பெரிய புராணம் திருநாவு.66) திருநாவுக்கரசரோ அத்திருநீற்றைப் 'பெருவாழ்வு வந்ததென' வாங்கி அணிந்து கொண்டு கோயில் புக்கார். திருநாவுக்கரசர், சமணம் விடுத்துச் சைவத்துக்குள் புகுந்த சடங்கு இதுவேயாகும். சேக்கிழார் சமய மாற்றத்திற்கு வேறு விரிவான சடங்ககளைச் சொல்லவில்லை. அதுபோலவே நகரத்தார்களும்

Koviloor Digital Library

சமணத்தை விடுத்துச் சைவத்துக்கு எளிய முறையில் மதம் மாறியிருக்க வேண்டும். குடும்பத்தினர் அனைவரும் சமணரா யிருந்தமையான், மாணிக்கவாசகர் போன்ற ஓர் அந்தணரால் சைவராய் மாறிச் சிவதரிசனம் பெற்றனர்.

உறுதிப்பாடு

திருக்கார்த்திகையில் சமய மாற்றத்தை ஏற்றுப்பின் நாள்தோறும் மனதைச் சைவ நெறிக்குத் தகுதிப்படுத்திக் கொண்டு பிள்ளையார் நோன்பு அன்று ஸ்திரமாக (நிலையாக)ச் சைவராயினர். மதம் மாறியவர்கள் மனம் தடுமாறலாகாது என்பதற்காகவும் பழைய மதத்தவரால் இடையூறு வரலாகாது என்பதற்காகவும் தொடர்ந்து இருபத்தொரு நாள் நோன்பு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்திருந்து வந்து சிவசிந்தனையின் தொடர்பாலேயே, பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை, வேழ முகம் போன்ற சைவசித்தாந்தம் பேசும் நூல்கள் படிக்கப்பட்டன.

மாற்றியவர் யாரோ?

நகரத்தார்களைச் சைவராக்கியவர் யார்? மதம் மாற்றவர் செய்தவர் யார்? என்பதை அறிய வேண்டிய ஆதாரங்கள் இல்லை. நகரத்தார்களின் மனமாற்றத்துக்கும் மதமாற்றத்துக்கும் மாணிக்கவாசகரே காரணமாவார். நகர வேலங்குடிக்கோயிலில் நடராசர் சந்நிதியில் யோக தண்டமுள்ளது. இத்தண்டத்தை வைத்துக் கொண்டே நகரத்தார்களுக்கு, அவர்களுடைய உபதேசகுரு ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசிப்பார். அத்தண்டமில்லாமல் உபதேசிப்பது. இல்லை. பிரமாணர்களிடையே தந்தையே மகனுக்கு மந்திரோபதேசம் செய்வர். ஆனால் நகரத்தார்களில் பிள்ளைக்குப் பெற்றவன் உபதேசிப்பதில்லை. இதற்கெனத் தனியே உள்ள பிராமண குருவே உபதேசிப்பார்.

மாணிக்கவாசகர் தொடர்பினாலேயே இந்த யோக தண்டம், நகர வேலங்குடி நடராசர் சந்நிதியில் உள்ளது. 'குரு' என்று நோக்கும் போது தட்சிணாமூர்த்தி சந்நிதியில் இருக்க வேண்டும் நகரத்தார்களின் பூர்வீகத் தலமான இளையாத்தக்குடிக் கோயிலில் இருத்தலே பொருத்தம். நகரத்தார்களில் தலைமை பூண்டு வணிக மேலாண்மை நிருவாகத்தை மேற்பார்த்தவர்கள் இளையாத்தக்குடி- பட்டண சுவாமியார். அதைப் போல நகரத்தார்களின் சமயத்தொடர்பானவற்றைக் கண்டு நடத்தியவர்கள், வேலங்குடிக் கோயிலார். நகரத்தார்கள் தனித்தனிக் கோயிலாகப் பெருகுமுன்னர், அவர்களின் தீட்சாகுரு தொடர்பானவற்றை வேலங்குடி நகரத்தார்களே செய்து வந்தனர். இதனால் இவர்கள் 'தேசிக நாராயண புரமுடையார்' எனப்பெற்றனர். (வேலங்குடிக் கோயில் ப.19) இப்பெயர் இவர்களுக்கும் இவ்வூருக்கும் எவ்வாறு ஏற்பட்டது என்பது ஆராயதற்குரியது. ஆனால் 'தேசிகர்' = குரு என்று பொருள். 'தேசிக

நாராயண' என்பது குருவுடன் நெருக்கமானவர்கள் இம்மரபினர் என்பதைக் காட்டுகிறது. (தேசிகர் என்ற சொல்லுக்கு வணிகர் என்றும் பொருளுண்டு.)

நகரத்தார்களின் குரு, காசி யாத்திரை சென்ற போது அவர்களை வழியனுப்பி வேண்டிய நன்மைகள் செய்தவர்கள், வேலங்குடிக் கோயிலாரே. காசி போன குரு வாராமல் காலங்கடந்து போனமையால், புதிய குருவை ஏற்படுத்தி உபதேசம் கேட்டுக் கொள்ளத் தூண்டியவர்களும் இவர்களே. இதனால் இவர்கள் குருவின் மனவருத் தத்துக்கும் சாபத்துக்கும் ஆளாக நேரிட்டதும் வரலாறு. புதிய குருவிடம் உபதேசம் கேட்டவர்களில் மிகுதியானவர்கள் மாத்தூர்க் கோயிலாரே. அவர்கள் அனைவரும் புதிய குருவின் திருவருள் பெற்றுப்பெருகினர். உபதேசம் கேட்பது 'உபதேசப் புதுமை' என்று பெருங்கொண்டாட்டமாகியது. வேலங்குடிக் கோயில் - மாணிக்கவாசகர் சந்நிதியில் - யோக தண்டம் இருப்பது நகரத்தார்களுக்கும் மாணிக்கவாசகருக்கும் தொடர்பிருப்பதைக் காட்டுகிறது.

நகரத்தார்கள் சாதி முறை நியாயம் எழுதி வைத்தார்கள், 'நகரத்தார்கள் குதிரை வியாபாரம் செய்யாதிருத்தல் வேண்டும்' என்று எழுதியிருக்கின்றனர். மாணிக்கவாசகர், பாண்டியனுக்குக் குதிரை வாங்கப் போய் பட்ட பாட்டைச் சிவனே அறிவான். மாணிக்கவாசகரைப் பாடாய்ப்படுத்தி அலைக்கழித்த குதிரை வணிகம் என்பதால் அதனை நகரத்தார்கள் புறக்கணித்தனர்.

இதுகாறும் சுட்டியவற்றால் நகரத்தார்கள் மாணிக்கவாசகர் காலத்தில் மாணிக்கவாசகரால் சமணர்களாக இருந்தவர்கள் சைவர்களாயினர் என்று தெரிகிறது. அக்காலத்திலிருந்து இவர்கள் தனியே ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினராய் செட்டிநாடு வட்டாரத்துக்குள் நிலையாக வந்து விட்டனர்.

பிள்ளையார் நோன்பு நாள்

கார்த்திகைக் கார்த்திகை, மார்கழித் திருவாதிரை, மார்கழிச் சதயம் என்று மூன்று நட்சத்திர நாள்களும் நகரத்தார்கள் வாழ்வில் குறிக்கத்தக்கவை. தநுர் மாதம் (மார்கழி) ஒரே இடத்திலிருந்து வழிபாடு செய்தற்குரிய மாதம். பிள்ளையார் வழிபாட்டில் இரண்டு நாள்கள் மிகச் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. ஒன்று ஆவணித் திங்கள் பூர்வ பட்சச் சதுர்த்தி நாள்; (இதனை ஆச்சாரிமார்கள் சதுர்த்தி விரதம் என்று பிடிப்பர்.) மற்றொன்று மார்கழித் திங்கள் பூர்வ பட்சச் சதுர்த்தி. ஆவணி பூர்வபட்சச் சதுர்த்தி, விநாயகப் பெருமான் பிறந்த நாளாகும். மார்கழிப் பூர்வ பட்சச் சஷ்டி பிள்ளையார் கஜமுகாசூரனை அழித்து அடியார்களைக் காப்பாற்றிய நாள்; விநாயகப் பெருமான், கஜமுகாசூரவதம் செய்ததை திருநாவுக்கரசர்,

Koviloor Digital Library

"கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற் கொல்வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்"
(ஆறாம். 533)

என்று பாடுகிறார். இந்த இரண்டு நாள்களிலும் விநாயகரை வணங்கினால் அல்லவை அழிந்து நல்லவை பெருகும். இதனைச் சிலர் குமார சஷ்டி என்று சொன்னாலும், இதில் விநாயகருக்குத் தான் முதன்மை.

வேற்றுச் சமயத்தை அழித்துச் சைவ சமயத்தைக் கைக்கொள்ள விநாயகர் கஜமுகாசுரனை அழித்து வென்ற நாளை நகரத்தார்கள் தேர்ந்து கொண்டனர்.

இழை எடுக்கும் இடம்

பிள்ளையார் நோன்பு அன்று நகரத்தார்கள் தங்கள் வீடுகளிலேயே இழை எடுத்துக் கொள்ளுவர். பிள்ளையாரை வழிபாடு செய்து தங்கள் வீடுகளிலேயே இழை எடுத்துக் கொள்வது பெரும் வெற்றியைத்தரும்; வழிபடுவோரை மனத்துன்பம் எவையும் கிட்ட நெருங்கா. இன்று நகரத்தார் வீடுகளில் பெண்கள் பலகாரம் செய்வதற்கு அஞ்சியே பொது இடங்களுக்குச் சென்று இழை எடுத்துக் கொள்ளுகின்றனர். சில ஊர்களில் நகரப்பொதுவான வீடுகளிலோ நகரவிடுதிகளிலோ விநாயகர் கோயிலிலோ ஒருங்கு கூடிப் பிள்ளையார் வழிபாடு செய்து இழை எடுத்துக் கொள்ளுகின்றனர்.

நகரத்தார் வீடுகளில் விசேடம் செய்யும் வீடு (அறை) என்று ஒன்றிருக்கும். இங்குத் தான் பொங்கல், பிள்ளையார் நோன்பு, சித்திரபுத்திர நயினார் பொங்கல், பங்குனிப் பொங்கல் போன்றவற்றைக் கொண்டாடும் போது திருவிளக்கு ஏற்றுவர். நகரத்தார்கள் கோட்டை போன்ற பெரிய வீட்டில் வாழ்ந்தாலும், நடப்பில் புழங்க இருக்க இன்னொரு வீடும் வைத்திருப்பர்; இங்குள்ள அறையே இத்தகைய விசேடங்களுக்குப் பயன்படும். பெரும்பாலும் படைக்கிற வீட்டில் இழை எடுத்துக் கொள்வதில்லை.

ஒன்பது நகரக் கோவில், வயிரவன் கோயில் அக்கோயிலார் ஏற்பாட்டில் அங்குள்ள நகர விடுதியில் பிள்ளையார் நோன்புக்கு இழையெடுத்துக் கொடுக்கப்பெறுகிறது. (இது தனியே ஆராய்ந்து எழுத வேண்டிய பகுதி.)

- நன்றி : பூச்சரம், திசம்பர் 2005

Koviloor Digital Library



நகரத்தார் கலைக்களஞ்சியத்தில்

பிள்ளையார் நோன்பு

தமிழ்நாட்டில் நகரத்தார் மட்டுமே கடைப்பிடித்துக் கொண்டாடும் விழா பிள்ளையார் நோன்பு, திருக்கார்த்திகையில் இருந்து 21 ஆவது நாளில் சஷ்டியும் திதியும் சதய நட்சத்திரமும் சேரும் நாளில் பிள்ளையார் நோன்பு கொண்டாடுவது வழக்கம். இழை எடுத்துக் கொள்ளுதல் தான் இதில் முதன் வாய்ந்த சடங்காகும்.

நெற்கதிர், ஆவாரம்பூ, கண்ணுப்பூளைப் பூ ஆகியவற்றைப் பந்தாகக் கட்டி வாயில் நிலையில் செருகி வைப்பதும் சாமி வீட்டுக்குள் வைத்து வணங்குவதும் இந்நோன்பின் தொடக்கமாக இப்பொழுது அமைந்துள்ளது. சாமி வீட்டில் சுவரில் தும்பு பிடித்து வைத்த பிள்ளையார் வீற்றிருப்பார். வழக்கமாக ஏற்றும் வெள்ளிக் குத்து விளக்கோடு அகன்ற சிட்டி விளக்கு ஒன்றை நெய் ஊற்றிப் பிள்ளையார் நோன்பு விளக்காக ஏற்றுவார்கள். தேங்குழல், முறுக்கு, மாவுருண்டை, மணகோலம் முதலிய பலகாரங்களோடு முக்கியமாக எள்ளுருண்டை, கடலை உருண்டை விநாயகர் முன் வைக்கப்படும். இவற்றோடு சுட்டு வைக்கும் பலகாரங்களாகிய பணியாரம், வடை போன்றவையும் இருக்கும். இவற்றுள் முக்கியமாகக் கருப்பட்டிப் பணியாரம் சுட்டு வைப்பார்கள். வெல்லப்பாகு சேர்த்த மாவில் இழை எடுக்கக் கெட்டியாக வைத்துக் கொண்டு, பிறகு மாவில் தண்ணீர் விட்டுக் கரைத்துக் கருப்பட்டிப் பணியாரம் சுடுவார்கள். ஆகவே இதை எச்சில் படுத்தக்கூடாது எனக் கருப்பட்டிப்பணியாரம் மட்டும் சாமி கும்பிடுமுன் பிள்ளைகளுக்குக் கூடச் சாப்பிடக் கொடுப்பதில்லை. ஆனால் வடை பணியாரம் தரத் தடை சொல்வதில்லை.

21 இழைகள் கொண்ட நூலைச் சிறு சிறு துண்டுகளாக அளவாக நறுக்கி வைப்பார்கள். கோடி வேட்டி அல்லது துண்டிலிருந்து இழை நூல் எடுக்கப்படுவது வழக்கம். நகரப் பிள்ளையார் கோவில்களில் பங்காளிகளுக்கு இழை நூல் வழங்குவதும் உண்டு. வெல்லப்பாகு அல்லது திரட்டுப்பால் பாகில் சிறிது நெய் சேர்த்துக் கூம்பு போன்ற வடிவில் பிடித்து வைத்து அதில் திரிபோல நறுக்கி வைத்த நூல் இழை நடுவில் மேல் எழுந்து நிற்கும் வண்ணம் பிடிப்பார்கள். குடும்பத்தினர் எண்ணிக்கைகேற்ப 5,7 என இழை பிடித்து வைப்பதுண்டு. **ஒற்றைப் படை எண்ணிக்கையில் தான்** பிடித்து வைப்பது வழக்கம். குடும்பத் தலைவர் தடுக்கில் வந்து அமர்வார். வறுத்து வைக்கப்பட்ட எள்ளுப் பொரி, நெல்லுப்பொரி ஆகியவற்றைத் தூவிப் பிள்ளையாரை வழிபடுவார். பிடித்து வைத்த இழைகளைப் பிள்ளையார் விளக்கில்

ஏற்றித் தீப ஒளி அணையாமல் வாயில் போட்டுக் கொள்வார். இது பிள்ளையார் இழையாகும். பிறகு குடும்பத் தலைவர் தனக்குரிய இழையை எடுத்துக் கொள்வார். மற்றவர்களுக்கும் கூம்பு வடிவமான இழையை நெய் தோய்ந்த திரியை விளக்கில் காட்டி ஏற்றிக் கொடுப்பார். குடும்ப உறுப்பினர்கள் தலைவரை விழுந்து வணங்கி இழையைப் பெற்றுக் கொண்டு சுடர் அணையாமல் வாயில் போட்டுக் கொள்வர். 'ஒளி வடிவான இறைவனை நமக்குள்ளே எழுந்தருளச் செய்யும் செயல்' என இதற்குத் தத்துவ விளக்கம் அளிப்பர். இழை எடுத்துக்கொள்ளும் போது பெண்கள் மங்கலச் சங்கு ஊதுவர்.

முன்னாட்களில் முருகனுக்குரிய கார்த்திகைத் திருநாளின் மறுநாள் நோன்பு தொடங்கி மார்கழி வளர்பிறை சஷ்டி வரை இவ்விரதத்தை மேற்கொண்டு வந்தனர். முதல் 20 நாட்கள் ஒருவேளை மட்டுமே பலகாரம் சாப்பிட்டு நோன்பிருந்து 21 ஆம் நாள் சஷ்டியன்று முழுப்பட்டினி நோன்பிருந்து விநாயகரை வழிபட்டு விரதத்தை நிறைவு செய்வது வழக்கமாக இருந்தது. விரத நாட்களைக் கணக்கிடும் வகையில் நாளுக்கு ஒரு நூல் இழை வீதம் 21 இழைகள எண்ணி எடுத்து வைத்துள்ளனர். விரத நிறைவைக் கொண்டாட நிறையப் பலகாரங்கள் செய்தனர். இப்போது நோன்பு விரதம் நின்று விட்டது. நிறையப் பலகாரம் செய்து வைத்து வழிபட்டு இழை எடுத்துக் கொண்ட பின்பு பலகாரம் சாப்பிடுவது நடைமுறையில் உள்ளது.

முன்னாட்களில் வளவுக்குள் பெரியவர்கள், பங்காளிப் பெரியவர்கள வீடு வீடாக வந்து எல்லோர் வீட்டிலும் இழையெடுத்துக் கொடுக்கும் பழக்கம் இருந்ததாம். இப்போது செட்டிநாட்டுக்கு வெளியில் வாழும் நகரத்தார்கள் நகரத்தார் சங்கத்தில் கூடி அங்குப் பெரியவர்கள் இழை எடுத்துக் கொடுக்க வாங்கிக் கொண்டு பிள்ளையார் நோன்பு கொண்டாடுகிறார்கள். பிள்ளையார் நோன்புப் பலகாரம் சங்கத்தில் பொதுவில் செய்து எல்லோரும் சாப்பிடுகின்றார்கள். செட்டிநாட்டிற்குள்ளும் தெற்கு வட்டகையைச் சேர்ந்த பல ஊர்களில் நகரத்தார்கள் கோவிலில் கூடிப் பொதுவாக இழையெடுத்துக் கொண்டு பிள்ளையார் நோன்பைக் கொண்டாடுகிறார்கள். வயிரன்பட்டி நகர விடுதியில் ஆண்டுதோறும் பிள்ளையார் நோன்பு விழா சிறப்பாக நடைபெறுகிறது. பிற கோவில் நகரத்தாரும் அங்கு வந்து இழை எடுத்துக் கொண்டு பலகாரம் சாப்பிட்டுப் பிள்ளையார் நோன்பு கொண்டாடுகின்றனர். கோவை நகரத்தார் சங்கம் கோவை வாழ் நகரத்தார்களுக்கு ஆவாரம்பூ கட்டிக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வருகிறது.

நகரத்தார் சமூகப் பண்பாட்டில் பிள்ளையார் நோன்பு அவர்களின் தனித்தன்மையைக் காட்டும் விழா ஆகும்.

நன்றி : பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன்
மற்றும் பதிப்பாசிரியர்

Koviloor Digital Library



நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு ஓர் ஆய்வு

இலக்கியப் பேருரையாளர் **கவிஞர் இராகவன் முத்து,** காரைக்குடி.

தோற்றுவாய்

பூவுலகில் வாழும் மனிதர்களின் காலக் கணக்கில் ஓராண்டு என்பது 'வான் உலகத் தேவர்க்கு ஒரு நாள் பொழுது' என்று சமய நூல்கள் கொள்ளும்; சொல்லும். அதன் பின்புலத்தில், மார்கழி மாதம் என்பது தேவர்களின் நாள் தொடக்கத்திற்குரிய 'வைகறை யாமம்' (பிரம்ம முகூர்த்தம்) என்றும் அதனாலேயே அம்மாதம் 30 நாட்களும் பூவுலகில் இறைவழிபாட்டிற்கு நம்மை ஆட்படுத்திக் கொண்டவர்களாக மனிதர்கள் வாழ்தல் நலம் என்றும் வகுத்தனர். மார்கழி வழிபாட்டில் 'திருப்பள்ளி எழுச்சி'ப் பாடல்கள் கோல் ஓச்சியதும் இதனால்தான் எனலாம்.

மார்கழித் திங்களில் எத்துணையோ வழிபாடுகள் - தெய்வம் போற்றுதல் ஆகிய - சமய விழாக்கள் இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் வாழும் இந்தியர்களால் - சைவம் முதலாகிய ஆறு இந்து மதக் கூறுகளையும் பின்பற்றுவோரால் - கொண்டாடப்பெறுகின்றன. சாதி வேறுபாடின்றி அவற்றில் பல விழாக்கள் - தீபாவளி, வைகுண்ட ஏகாதசி, மகாசிவராத்திரி, நவராத்திரி, ஸ்ரீராம நவமி, மகா சதுர்த்தி (பிள்ளையார் சதுர்த்தி) போன்றன - பல இனத்தவரால் கொண்டாடப்பெறும். ஆனால், மார்கழி மாதத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மேற்கொள்ளும் பிள்ளையார்நோன்பு என்ற பெருந்திரு நோன்பை - நகரத்தார்கள் மட்டுமே பின்பற்றி மறவாமல் கொண்டாடி மகிழ்கின்றனர். அந்நோன்பு குறித்த சில (பல) செய்திகளை ஆய்வு நோக்கில் இங்கு காண்போம்.

நோன்புக் காலம்

மார்கழி மாதத்து வளர்பிறையில் வரும் சஷ்டி நாள் மிகப் பெரும்பான்மை சதய நட்சத்திரத்துடன் இணைந்து வரும். சஷ்டி சதயம் கூடிய மார்கழி வளர்பிறை நாளில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் யாவரும் பிள்ளையார் நோன்பு என்ற திருவிழாவை மேற்கொண்டு,

Koviloor Digital Library

தவறாமல் கருப்பட்டி மாவினால் அல்லது திரட்டுப்பாலினால் செய்யப் பெற்ற 'இழை'யை ஒளியுடன் பெற்று, 'எடுத்துக்கொண்டு' (உண்டு) மகிழ்கின்றனர்.

நோன்பு தோன்றிய காலம்

எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் சைவ சமயத்தில் நின்று புறம் சாராமல் வாழ்தல் நகரத்தார்களின் இயல்பும் கொள்கையும் ஆகும். முழுமுதற் பொருளாம் சிவபிரானுக்கு ஒரு தாயாகக் காரைக்கால் அம்மையும் தந்தையாகத் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளும் திருஅவதாரம் செய்த மரபு - நம் நகரத்தார் மரபு. 'சிவ கோத்திரம்' என்று வடநூல் மரபு கூறும் பெருமை உடைய: மரபு. எனவே சிவபெருமான் தொடர்பான செய்திகளை முழுமையாக நம்பிக்கையுடன் ஏற்றுப் பின்பற்றி வந்தவர்கள் நகரத்தார்கள்.

பிள்ளையார் நோன்பு எப்பொழுது தோன்றியது என்ற காலக் கணக்குக் காட்டும் குறிப்புக்கள் எவையும் எம் தேடுதலுக்குக் வல்லார்வாய்க் கேட்கும், நூல்களைத் தேடியும், துழாவிய வகையில் கிடைக்கவில்லை. ஆனால், ஒரு கற்பனை - சாத்தியக்கூறு - பட்டினத்தடிகள் காலத்தில் இவ்விழாவின் தொடக்கம் அமைந்திருக்கலாம். பட்டினத்தடிகளின் பண்டாரக் காப்பாளர் ஆகப் பணியாற்றிவயர் சேந்தனார். திருப்பல்லாண்டு பாடியவரும் இவரே; நாங்கூர்ச் சேந்தன் என்று பெயர் பெற்றவர் இவரே. "பாரனைத்தும் பொய் என்று" துறந்த பட்டினத்தார் ஆணைப்படி, அவர் உடைமைகளைத் தெருவில் எறிந்தமை குறித்து, சோழ மன்னன் சேந்தனாரைச் சிறையிட்டுத் துன்புறுத்தினான். அவரைத் துன்பத்தில் இருந்து மீட்க வேண்டி, "மத்தளை தயிருண்டானும்" என்று தொடங்கும் பாடலால் சிவபிரானிடம் விண்ணப்பித்தார் பட்டினத்தார். அப்பொழுது, சிவபிரான் ஆனைமுகப் பெருமானை அனுப்பி அவர் வழியாகச் சேந்தனாரைத் துயரில் இருந்து மீட்டருளினார். இந்நிகழ்வினால், "சிவபிரான் கருணையினால் யாதொரு துன்பமும் வராமல் காப்பதற்குக் கணபதியே முன் வருவார்" என்ற உறுதிப்பாடு தோன்றி, அதனால் இவ்வழிபாடு தொடங்கி இருக்கலாம்.

நோன்பு முறை

கார்த்திகை மாதத்து முழுமதி நாள் (பெரிய கார்த்திகை) தொடங்கி 21வது நாள் பிள்ளையார் நோன்பு வரும். பழங்காலத்தில் பெரிய கார்த்திகை அன்று நோன்புக்காக காப்புக்கட்டி விரதம் தொடங்குவார்கள். அன்று முதல் 21 நாட்கள் புலனடக்கத்துடன், இயன்றவரை உண்ணா நோன்பு (ஒருவேளை) மேற்கொண்டு, முடிவு

நாள் 21வது நாளில் கணபதியை வழிபட்டு, இரவில் நிறையப் பலகாரங்கள் படைத்து, இனிப்புப் பொருட்கள் இடம்பெற்ற பிரசாதங்களையும், முக்கியமாக 'இழை'யையும் உட்கொண்டு நோன்பை நிறைவு செய்தனர். கருவில் இருக்கும் சிசுவுக்கும் பிள்ளையார் நோன்பு இழை எடுத்துக் கொடுப்பர். **நகரத்தார் அல்லாத எவருக்கும் 'இழை' கிடையாது.**

21 நாட்களும் காலையில் நீராடி, இறைவழிபாடு செய்து, 'கோடி' ஆடையில் ஒரு நூல் இழையை எடுத்து ஒவ்வொரு நாளும் வைப்பர். நிறைவு நாளில் 21 இழைகளையும் சேர்த்துத் திரியாக்கி, 'குத்துப் பிள்ளையார்' வடிவில் ஆன இழையில் வைத்து, இழை எடுத்துக் கொள்வர்.

இப்பொழுது, 21 நாட்கள் (கடும்) நோன்பு மேற்கொள்பவர் யாரும் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. பிள்ளையார் நோன்பு நாளில் ஒரே நாளில் 21 இழை புது வேட்டி/ துண்டில் இருந்து எடுத்த நூல் இழைகளைச் சேர்த்துத் திரியாக்கி இழை எடுக்கின்றனர்.

கணபதிக்கு நிவேதனமாகப் பற்பல வகைப் பலகாரங்கள் - அப்பம், வடை, மோதகம் (கொழுக்கட்டை), கருப்பட்டிப் பணியாரம், திரட்டுப்பால் படைக்கின்ற வழக்கம் உண்டு. இவற்றுடன் எள்ளுப் பொரியும், நெற்பொரியும் வைப்பதும் வழக்கம். பிள்ளையார் படங்களுக்கு அல்லது சிறிய பிள்ளையார் திருவுருவச் சிலைக்கு மல்லிகை முதலிய மாலைகள் அணிவித்தாலும், "பிள்ளையார் நோன்புப் பூ" என்று ஒரு 'பூச் செண்டை' வைத்து வணங்குவது மரபு. ஆவாரம் குச்சியில் ஆவாரம்பூ, பூளைப்பூ, நெற்கதிர் இவற்றை இணைத்துக் கட்டிய பூங்கொத்துத் தான் பிள்ளையார் நோன்புப் பூ ஆகும்.

புராணச் செய்திகள்

பன்னிரண்டு மாதத்திலும் வளர்பிறைச் சஷ்டி 12 (குறைந்தது) வரும். அவற்றில் சைவர்கள் 3 சஷ்டிகளை மறவாமல் போற்றுவர். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி - இம் மூன்றிலும் வரும் வளர்பிறைச் சஷ்டி நாட்கள் தாம் அவை. ஏனெனில் இம்மூன்று நாட்களிலும் பரம்பொருள் ஆகிய சிவபிரான் தானோ, தன் வடிவில் உள்ள ஒருவராலோ தீமைகளை களைவதாகிய 'சூர சம்ஹாரம்' (அரக்கர் அழிவை) நிகழ்த்தினார். ஐப்பசி வளர்பிறைச் சஷ்டிதான் தீபாவளியை அடுத்து வரும் கந்தர் சஷ்டி என்ற மகா சஷ்டி. அந்நாளில் சூரபமத்மனை முருகப் பெருமான் வென்றார். கார்த்திகை மாதம் வரும் வளர்பிறைச் சஷ்டியில் பைரவ வடிவில் சிவபிரான் அசுரனை வதம் செய்தார். (அசுரன் சம்பாசுரன் அல்லது சம்பராசுரன் என்றும் அதனால் அதற்குச் சம்பா சஷ்டி என்று பெயர்,

Koviloor Digital Library

என்று கூறுவர்) மார்கழி மாதம் வரும் வளர்பிறைச் சஷ்டியில் பிள்ளையார் சூரனை அழித்து வெற்றி பெற்றார். (சூரன் கஜாமுகன் என்ற அசுரன் ஆகலாம்; அல்லது அனலாசுரன் ஆகலாம்) இவ்வாறு புராண இயல் வல்லுநர் கூறுவர்.

இவற்றுள் ஐப்பசி மாத மகாசஷ்டி அத்துணை முருகன் ஆலயங்களிலும் - (சிவாலயங்களிலும்) ஒரு பெரிய விழாவாக நிகழ்கிறது. கார்த்திகை மாதத்துச் சம்பா சஷ்டி, நகர வயிரவன்பட்டி கோயிலில் நிகழ்கிறது. இன்னும் சில பைரவ சான்னித்யம் மிகுந்த கோயில்களிலும் நிகழ்வதாக அறியப் பெறுகின்றது. மார்கழி மாத சஷ்டியாகிய பிள்யைார் நோன்பு-கணபதி சஷ்டி என்றும் வழங்கப்பெறும் நாள்- ஆலயங்களில் கொண்டாடப் பெறுவதாகத் தெரியவில்லை. நகரத்தார்கள் தங்கள் வீடுகளில் நோன்பு மேற்கொண்டு இந்நன்னாளை விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

சம்பா சஷ்டி அன்று தன் கொம்பினால் கஜமுகாசுரனை வென்று கணபதி தன் வாகனமாக்கிக் கொண்டார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

நோன்பின் பின்னணிகள் (தத்துவங்கள்)

1. கார்த்திகைப் பெருநாளாகிய தீப. (ஒளி) நாளில் தொடங்கி 21வது நாள் இழை எடுத்தலாகிய தீப ஒளியின் பொலிவுடன் இந்நோன்பு நிறைவுறுகிறது. "ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே" என்ற திருமுறைப் பாடலை நினைவு கொண்டு இறைவனை ஒளி வடிவில் வணங்கிய வழிபாடு இது எனலாம்.

2. பிள்ளையார் நோன்பு வழிபாடு மேற்கொள்ளும் களத்தில் - சுவாமி வீட்டில்/மடத்தில்/கோவிலில் அழகிய மாக்கோலங்கள் இட்டிருப்பர். சுவரிலும் மாவினால் ஒரு கோலம் இழைப்பர். இக்கோலத்தில் 'தேர்' வடிவம் கட்டாயம் இடம்பெறும். திரிபுரம் எரித்தற்குச் சிவபிரான் தேர் மீது செல்லும் முன் கணபதியை வணங்க மறந்ததால், 'முப்புரம் எரிசெய்த அச்சிவம் உறைரதத்தின்' அச்சினைக் கணபதி பொடியாக்கினார். 'நாங்கள் உன்னை மறவாமல் தொழுகின்றோம். தடைகள் யாவும் நீங்கி எங்கட்கு வாழ்வில் வெற்றிக்கனி எளிதிற் கிடைக்க வேண்டும்' என்ற விண்ணப்பத்தைக் கோலத்தின் வாயிலாகக் கணபதியிடம் செலுத்திய நிலை எனலாம்.

3. 21 நாட்கள் உணவு நியமங்கள் (உண்ணா நோன்பு) கொண்டிருந்தால் உடலின் கொழுப்பும் இனிப்பும் (Sugar Deposit) குறைந்திருக்கும். கருப்பட்டியால் செய்த இனிப்புப் பொருட்கள் உடலின் சர்க்கரை அளவையும் நெய்க்கலப்பு, கொழுப்பையும் குறைவகற்றி ஈடு செய்யப் பயன் தரும்.

Koviloor Digital Library

4. பூச்செண்டில் இடம்பெறும் கண்ணுப்பிள்ளை என்ற பூளைப்பூ மிகக் குறைந்த வாழ்நாள் உடையது. யாக்கை நிலையாமைக்கு உவமையாகப் பூளையை இலக்கியம் சொல்லும். ("பூளையாயின் உன் வாழ்வு" என்று இராமன் இராவணனிடம் சொல்வதாகக் கம்பர் பாடுவார்). மனித வாழ்வின் குறுகிய வாழ்நாள் எல்லை - நிலையாமையை நாங்கள் உணர்ந்துள்ளோம் என்ற பணிவைப் பூளைப்பூ குறிக்கும்.

"ஆடு பயிர் காட்டும்; ஆவாரை நெல் காட்டும்" என்பது முதுமொழி. ஆவாரம் பூவையும் நெற்கதிர்களையும் இணைத்து வைத்து வணங்கியதால் - "நெற்பயிர் நிறைய விளைய வேண்டும்; பயிர் வரவும் பண வரவும் மிகச் செழிப்பாக வேண்டும். இது எங்கள் வேண்டுதல். தன வணிகர் ஆகிய நாங்கள் நெற்பயிர் விளைவிலும் அக்கறை உடையோம். பயிர் விளைச்சல் மிகுந்தால் உலகில் பஞ்சம் குறையும். நெல் விளைச்சலுக்கு ஆவாரை துணை செய்தல் போல் எங்கள் வாழ்வு முழுமைக்கும் பிள்ளையார் திருவருள் துணை செய்ய வேண்டும்" என்ற எண்ணங்களைக் குறிப்பிட்டு அருள் வேட்ட வழிபாடு எனலாம்.

5. பிள்ளையார், தேவர்கள் துயர் தீர்க்க வேண்டி அவர்களைத் துயர் செய்த அனலாசுரனை விழுங்கிவிட்டார். இதனால் அவர் உடலில் திருவுதரத்தில் - மிகப்பெரிய நெருப்பு இடம் கொண்டது. எவ்வளவு உணவு வகைகள், அமுதம் இவற்றாலும் அந்நெருப்புக் குறையவில்லை. அதனாலேயே அவர் விரும்பி உண்ணும்படியான பற்பல வகை உணவுப் பொருட்களை - சிறு குழந்தைகட்கு ஏற்ற பலகார வகைகளை - அவர் முன் படைக்கின்றோம். "இனிய கனி கடலை பயறு ஒடியல் பொரி அமுது செய்" இபமுகவன் என்பது அருணகிரியார் பாடல்.

"அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடி அவலோ(டு) எள்ளுண்டை கன்னல் - வடிசுவையில்
தாழ்வான்"

என்பது 11 ஆம் திருமுறையில் உள்ள கணபதி வணக்கப் பாடல்.

6. மேற்கூறிய செய்தியில், கணபதியின் திருவயிற்று வெம்மை குறைவதற்காக எண்பதாயிரம் மாமுனிவர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு 21 அறுகு சாத்தி அவருக்கேற்ற 21 திருநாமங்களை ஓதி வணங்க, கணபதியின் திருவயிறு குளிர்ந்தது என்று புராணம் கூறும். அறுகு (அறுகம்புல் - வடமொழியில் தூர்வா) கிடைக்காவிடில் வன்னி இலை, மந்தார மலர் கொண்டு வழிபடலாம். அதனால் கணபதி மிக மகிழ்ந்து குளிர்ந்து அருள்மழை பொழிவார் என்பது புராண மரபு. இந்த நிகழ்வின் அடிப்படையில் 21 நாட்கள் கணபதி வழிபாட்டிற்கு எடுத்துக் கொண்டிருக்கலாம்.

7. மனிதர்கள் பிறவி நீங்கிப் பேரின்பம் பெற முயற்சிக்க வேண்டும்; அதை இலட்சியமாகக் கொள்ள வேண்டும். பிறவிக்குக் காரணம் வினைப்பயன். வினைமுதல் முற்றும் அழிந்து விட்டால் பிறவு இல்லா நிலை - முக்தி - திருவடிப் பேறு எய்தலாம். வினைகளை அறுப்பது அல்லது அழிப்பது எளிய செயல் அல்ல. விதைகள் வறுத்து வைத்தால் அவை மீண்டும் முளைப்பதில்லை. அதுபோல், நெல்லும் எள்ளும் பொறிக்கப்பட்டால் - வறுக்கப்பட்டால் - அவை விதையாகும் தன்மையில் இருந்து விடுபடும். அம்மாதிரி, “இடையறாத பேரன்புடன் உன்னை வழிபடும் எங்கள் வினைகளை வறுத்துப் பொரித்து - அவற்றின் விளைவாகிய பிறவி வராமல் காக்க வேண்டும்” என்ற விண்ணப்பத்தை உட்கிடையாகக் கொள்வதற்கே எள்ளும் நெல்லும் பொரித்த பொறிகளின் படையல் வைத்திருக்க வேண்டும்.

8. இறைவன் ஒருவனே முழுமைப் பொருள் - குறைவிலா நிறைவு கொண்ட கோதிலா அமுது. அதை வடநூல் ‘புராணம்’ என்று பேசும். பூரணத்தின் வடிவம் வட்டம். வட்டத்தின் தொடக்கமே முடிவாகும். இந்த நோன்பும் ஒளி (கார்த்திகை)யில் தொடங்கி ஒளி (இழை)யுடன் நிறைவுறும். இழையை உட்கொள்வது, இனிமை செறிந்த இறைவடிவை உட்கொள்தலாம்.

9. வடநாட்டில் கணபதி சதுர்த்தி - மகாசதுர்த்தி விழாவை 9 நாட்கள் கொண்டாடி, விழா இறுதியில் பூசை செய்த திருவுருவச் சிலையைக் கடலில் / ஆற்றில் கரைப்பர். (விசர்ஜனம் என்று இதற்குப் பெயர்) அதை ஒப்ப, பிள்ளையார் நோன்பு நாளில் வைத்த ‘பூச் செண்டை’ ஒரு நல்ல நாளில் ஆற்றில் அல்லது குளத்தில் சேர்ப்பது வழக்கம். கணபதி கருணையால் தான் காவிரியாறு பூவுலகிற்கு வந்தது. எந்த நீர்நிலையையும் காவிரி என்று அழைப்பது வழக்கம். இம்மரபு, கணபதியின் கருணையை காவிரியையே நினைவுகூர்வதாகலாம்.

இன்னொன்று, எல்லா அழுக்கையும் தண்ணீர் ஏற்றுத் தூய்மை வழங்குவது போல் இறைவனும் குற்றங்கள் நீக்கி அடியாரை ஆட்கொண்டு கோதாட்டுகிறான். அவனுக்கு அதனால் ‘தீர்த்தன்’ என்றே ஒரு பெயர் உண்டு. பூச்செண்டை ஆற்றில் இடும்போது, இறைவனைத் ‘தீர்த்தன்’ என்று காணும் எண்ணம் வந்திருக்க வேண்டும். ‘தீர்த்தன் நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்’ என்பது திருவாசகம்.

10. பிரசாதங்கள் பெரும்பாலும் இனிப்பாக அமைவதால், வாழ்க்கை முழுவதும் செல்வச் செழுமையுடன் இனிமையாக அமைய வேண்டும் என்ற நோக்குடன் இந்த நோன்பை மேற்கொண்டிருக்க வேண்டும்.

Koviloor Digital Library


நிறைவுரை :

கணபதியை மூத்த பிள்ளையார் என்பது இலக்கிய மரபு. அதனால் கந்தவேள் இளைய பிள்ளையார் ஆகிறார். பிள்ளையார் - பரம்பொருளாகிய சிவனாரின் மைந்தர் என்பது தெரிய வருவது. நகரத்தார்கள் முருகவேள்பால் மிகப்பெரும் காதல் உடையவர்கள். எனவே கார்த்திகைத் தீப நாளாகிய முழுமதி நாளில் கந்தப்பிள்ளையைத் தொழுது மகிழ்ந்தவுடன், மூத்த பிள்ளையைக் குறித்தும் அன்றே நோன்பு தொடங்கி இருக்க வேண்டும். 21 நாட்கள் நோன்பு கொள்ளப் பல காரணங்கள் கண்டிருக்க வேண்டும். இயல்பாக, கார்த்திகைத் திருநாளின் 21வது நாள் சதயம் கூடும். (நட்சத்திர வரிசையில் அசுபதி தொடங்கி, 3வது கார்த்திகை; 24வது சதயம்) சதயம் என்பது மேல் நோக்கு நாள் - வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் காரணமாகவும் துணையாகவும் அமையும் என்பது சோதிட இயல். எனவே, மேன்மைகள் தரக்கூடிய 21வது நாளில் - கணபதி சஷ்டியில் - நோன்பை நிறைவு செய்திருக்க வேண்டும்.

நகரத்தார் பிள்ளையார் நோன்பால் வரம், நலம், வாழ்வு யாவும் கொண்டு வளர்ந்தோம்; வளர்கின்றோம்; மேலும் செழிப்புறுவோம்.

இவ்வாராய்ச்சிக்கு உதவிய துணை நூல் பட்டியல்கள் :

1. பதினோராம் திருமுறை; 2. பட்டினத்தார் பாடல்கள்; 3.தாயுமானவர் பாடல்கள்; 4. திருப்புகழ்; 5. எட்டாம் திருமுறை (திருவாசகம் - திருக்கோவையார்) 6. கம்பராமாயணம்; 7. விநாயக விஜயம் (Lifco), 8. பிள்ளையார் பெருமை (வாரியார்); 9. விநாயகர் வழிபாடு (க.ஜெயா - நாகர்கோயில்); 10. வரம் தரும் விநாயகர் (மதிநிலையம், சென்னை); 11. (கணபதி) தரிசதீ நாமாவல்லி (கலைமகள் டிரேடர்ஸ், சென்னை); 12. நானாவித கணபதி மந்திரங்கள் (பிரதிபா); 13. நகரத்தார் வரலாறு (பலர் எழுதிய பல நூல்கள்); 14.ஒன்பது நகரக் கோயில்கள் (வ.தேனப்பன்); 15. பிள்ளையார் கதைகள் (கே. சரஸ்வதி, நர்மதா).



Koviloor Digital Library



பிள்ளையார் நோன்பு

கே.அண்ணாமலை, கரூர்.

மன்னர் பின்னோராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்களாகிய நம், தனவணிகப் பெருமக்கள் பிள்ளையார் வழிபாட்டை முறைப்படி செய்து வருகிறார்கள். நம் சமூகத்தினர் அனைவரும் பொதுவாக வைத்து வணங்கும் விநாயகப் பெருமானை 'மரகத விநாயகர்' என்று வரலாற்றுச் சான்றுகளும், கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

எடுத்த காரியங்கள் எல்லாமே இடையூறின்றி நிறைவேறுதற் பொருட்டுச் செய்யத்தக்க விநாயகர் வழிபாடு ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலையாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது போல, நகரத்தார்களாகிய நம்மாலும் மேற்கொள்ளப்பெறுமாயினும், சிறப்பாக ஆண்டுக்கொரு முறை கார்த்திகை மாதக் கிருஷ்ண பக்ஷப் பிரதமை தொடங்கி, மார்கழி மாதச் சுக்கில பக்ஷச் சஷ்டித் திதி வரையில் உள்ள இருபத்தியோர் நாள் நகரத்தார்களாகிய நம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடும்ப விரத வழிபாடே 'பிள்ளையார் நோன்பு' ஆகும்.

இவ்வழிபாடானது எக்காலந் தொடங்கி, நம்மவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிட முடியாத பழங்காலந் தொட்டு, நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டால், நம்மவர்கள் அனைவருக்கும் பிள்ளையாரின் அருள் சிந்திப்பது ஒருபுறமிருக்க, ஏதாவது காரணம் பற்றிக் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட்டால், அப்பிணக்கெல்லாம் தீர்ந்து, ஒற்றுமை ஏற்படுவதற்கு பிள்ளையார் நோன்பு துணையாய் இருந்து வருகிறது. பொதுவாகப் பாரத நாட்டினர் பலருக்கும் தீபாவளி எப்படி முக்கியமோ, அப்படியே நம்மவர்க்கு மட்டும் குறிப்பாகப் பிள்ளையார் நோன்பு இன்றியமையாத வழிபாடாக வழிவழியாயிருந்து வருகிறது.

புராணங்களில், பிள்ளையார் வழிபாட்டிற்குச் சிறந்தனவாக ஆவணி மாதத்துப் பூர்வபக்ஷச் சதுர்த்தியும் (விநாயகர் சதுர்த்தி) மார்கழி மாதத்துப் பூர்வ பக்ஷச் சஷ்டியும் குறிக்கப் பெற்றுள்ளன. முன்னயைது பிள்ளையாரின் திருஅவதார நாளைக் குறிக்கின்றது. பின்னையது அவர் கஜமுகாசுரனை சூரசம்ஹாரம் செய்து, அடியார்களைக் காத்த நாள். இவ்விரு நாட்களிலும் வழிபாடு செய்வது இன்ப ஆக்கம், துன்ப நீக்கம் இரண்டையும் பெறுவதற்கென்று நம் முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளார்கள். அதனால் நாமும் அவர்களின் வழிநடந்து ஒவ்வொரு ஆண்டும், சீரும் சிறப்புமாகப் பிள்ளையார் நோன்பை மேற்கொண்டு, பிள்ளையாரின் பேரருள் பெற்றுப் பேரானந்த வாழ்வு வாழ்ந்து வருகிறோம்.

Koviloor Digital Library

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு முறை சமூகம் முழுவதிலும் ஒரே அமைப்பில் இருப்பதால், நோன்பு நாள் மாலையில், பிள்ளையாரின் திருவுருவத்தைப் புனிதமான இடத்தில் எழுந்தருளுவித்து, நிவேதனத்திற்காக எள், நெல் முதலியவற்றாலான பொரி வகைளும், பணியாரம் (என்று நாம் குறிப்பிடும் அப்ப வகைகளும்) வெல்லப் பாகுக் கடலை உருண்டை முதலியனவும் ஆசாரத்துடன் தயாரித்து, நிவேதித்து, ஆவாரம் பூவால் செண்டு கட்டிச் சாமி முன்னர் வைத்து, ஆவாரம் பூ அர்ச்சித்து, வேழமுகம் ஓதித் தோத்திரம் செய்து, இருபத்தோரு நூலிழைகள் கொண்ட திரியை, வெல்லஞ் சேர்த்த அரிசிமா, திரட்டுப்பால், வாழைப்பழம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றில் சேர்த்துப் பசுநெய் விளக்கில் ஏற்றிப் பிள்ளையாருக்குக் காண்பித்து வேண்டிக்கொண்டு உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.

விநாயகப் பெருமானுக்கு பொரி, கடலை, அப்பம் முதலியவற்றில் விருப்பம் அதிகம் என்பதால், அவைகளைப் படைத்தும், இந்த நோன்பு திருக்கார்த்திகை தொடங்கி சதய நக்ஷத்திரம் வரையுள்ள இருபத்தோரு நாளில் அமையும் சஷ்டியில் கொண்டாடப் பெறுவதால் அவ்விருபத்தோரு நாட்களையும் நினைவுகூரும் வகையில் அமைந்த ஏற்றம் இறக்கம் இல்லாத ஒக்கப் பிறந்தவர் இருவர், உடன் பிறந்தவர் மூவர், செக்கச்சிவந்தவர் ஐவர், செவ்வாழைப்பழம் மூன்று, நமரி வாழைப்பழம் நான்கு, பச்சைப் பாம்புக் குட்டி ஒன்று, படமெடுத்த பாம்புக்குட்டி மூன்று ஆக இருபத்தியொன்று.

விரதநாள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ரகைஷ(நூல்)யாக இருப்பத்தொரு ரகைஷகளைத் திரியாக ஒன்று கூட்டித் திருவிளக்கு ஏற்றுவதும், அந்த விளக்குக்கு ஆதாரமாக இனிப்புச் சுவை பொருட்களைக் கூட்டித் திருவருட் பிரசாதத்தை உட்கொள்ளுவதும், இந்த நோன்புச் செயல்களில் அமைந்துள்ள தத்துவங்கள்.


நகரத்தார் தம் ஒற்றுமை உணர்வையும், இறைபக்தியையும், சமூக அடையாளத்தையும் வெளிப்படுத்தும் சடங்குகளில், பிள்ளையார் நோன்பு முக்கியமானதும், முதன்மையானதுமாகும். மற்ற சமூகத்தினர் வெவ்வேறு நோன்புகளைக் கடைப்பிடித்தாலும், நம்மவர்கள் மட்டும் தான் முழுமுதற் கடவுளாகிய விநாயகர் பெயரில், பிள்ளையார் நோன்பு கொண்டாடி மகிழ்கிறோம்.

அதன்படி தொடர்ந்து நம் சமூகத்தினர் மார்கழி மாதச் சஷ்டியும் சதயமும் ஒன்றுகூடும் நன்னாளில் விநாயகப் பெருமானைப் பிள்ளையார் நோன்பு மூலம் வழிபட்டு வளம் பெற்று வாழ்ந்து வருகிறோம்.

தற்சமயம் கால அருமை, கூட்டுவழிபாட்டுப் பெருமை, சிக்கனம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு, பிள்ளையார் நோன்பு வழிபாடானது (சுழற்சி முறையில்) ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவர் வீடுகளிலும், நகரத்தார் சங்கங்களிலும், திருமணக் கூடங்களிலும் நடைபெற்று வருகிறது. பெரியவர்கள், சிறியவர் அனைவருக்கும் போட்டிகள், வைக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டும், ஏலம் நடத்தப்பட்டும் ஏற்றமுறப் பிள்ளையார் நோன்பு கொண்டாடிச் சிறந்தோங்கி வாழ்ந்து வருவது நம்முடைய நகரத்தார் சமூகம் என்றால் அது மிகையன்று.

Koviloor Digital Library

பிள்ளையார் நோன்பு



எஸ்.நாகம்மை, பெரம்பூர், சென்னை.

பிள்ளையார் நோன்பு நம் நகரத்தார்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட மகத்துவம் வாய்ந்த விழா, இழை எடுத்துக் கொள்ளுவது இதில் முக்கியம். புதுத்துணியில் வேட்டி அல்லது துண்டு எடுத்து, அதில் 21 இழை நூல் எடுத்து, சிறிது சிறிதாக வெட்டி வைத்துக் கொள்ள வேண்டும். திருக்கார்த்திகை வந்து 21 நாள் கழித்து சஷ்டி திதியும் சதயமும் (நட்சத்திரம்) சேரும் நாளன்று இந்த நோன்பு வரும்.

நம் செட்டியார் (நகரத்தார்கள்) மகளுக்குச் சீர் பரப்பும் போது (வெளிச்சாமான் செய்யும் போது) பிள்ளையார் நோன்பு அடுக்கு 1, (5 சட்டி சேர்ந்தது) பிள்ளையார் நோன்பு விளக்கு (ஐந்துமுகம்) சிறியது 1, பிள்ளையார் குடைபிடித்து சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பது இதெல்லாம் வைப்பது பழக்கம். இந்தச் சாமான்கள் அனைத்தும் பிள்ளையார் நோன்புக்கு மட்டும்தான் பயன்படுத்துவோம்.

பிள்ளையார் நோன்பு அன்று காலையில் முதல்நாள் மெழுகி வைத்த நடுவீட்டில் (சாமிவீடு) பச்சரிசி மாவில் கோலமிட வேண்டும். அருகில் பிள்ளையார் அமர்வதற்கு முக்காலி இடவேண்டும். வாசற்படியில் கோலமிட வேண்டும். நெல்லுக்கதிர், ஆவாரம்பூ, கண்ணுப்பிள்ளைப் பூ ஆகியவற்றை ஆவாரம் குச்சியில் பந்து போல் கட்டி, நடுவீட்டுக்குள் வைத்து வழிபட்டு, மறுநாள் காலையில் வீட்டுக்கு எதிரில் நடுவாசலில் வாரத்தில் செருகி வைக்க வேண்டும். (இது அவசியம்)

பலகாரங்கள் : தேன்குழல், மாவுருண்டை, மணகோலம், அதிரசம், சீப்புச்சீடை, எள்ளுருண்டை, கடலை உருண்டை முதலான வைத்துத் தின்னுகிற பலகாரமும், கருப்பட்டி பணியாரம், வெள்ளைப் பணியாரம், உளுந்துவடை, கற்கண்டு வடை, வாழைக்காய் பஜ்ஜி முதலான சுட்டுத் தின்னுகிற - அவரவர் இஷ்டம் போல் இன்னும் பல பலகாரங்களும் செய்து பிள்ளையாருக்குப் படைக்க வேண்டும். எள்ளுப்பொரி, கம்புப் பொரி, நெல்லுப் பொரி போன்ற பொரிகள் பிள்ளையார் முன் வைக்க வேண்டும். மேலவட்டகைப் பக்கம் இன்னும் பொரிகள் - சோளப் பொரி போன்ற - செய்து வைப்பார்கள். பொரி விளங்காய் என்று கருப்பட்டி பணியார மாவில் உருண்டையாக உருட்டி நன்கு வேக வைத்து பிள்ளையாருக்குப் படைப்பார்கள். திரட்டுப்பால் செய்து வைக்க வேண்டும். திரட்டுப் பாலிலும் இழை எடுத்துக் கொள்ளலாம். கருப்பட்டி பணியாரம் மாவிலும் இழை எடுத்துக் கொள்ளலாம். கருப்பட்டி பணியாரம் மட்டும் இழை எடுத்து பிறகு சாப்பிட வேண்டும். மற்ற பலகாரம் செய்ததும் ஒரு சட்டியில்

Koviloor Digital Library

(பிள்ளையருக்கு முன்பு) எடுத்து நடுவீட்டில் வைத்துவிட்டு வந்து சாப்பிடலாம். பிள்ளையார் முன்பு தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, புஷ்பம் வைத்து அர்ச்சனை செய்து, தேங்காய் உடைத்து, பிள்ளையாருக்குப் பூவைத்து பிறகு இழை எடுத்துக் கொள்ள வேண்டும்.


இழை எடுத்துக் கொள்ளும்போது நடு வீட்டு விளக்கு ஏத்த வேண்டும். சிலேட்டு விளக்கு ஏத்த வேண்டும். பிள்ளையார் எதிரில் பிள்ளையார் நோன்பு விளக்கு நெய் ஊற்றி ஏத்த வேண்டும். பிள்ளையார் நோன்பு விளக்கில் தான் இழை நூல் ஏத்த வேண்டும். இழை எடுத்துக் கொள்ளும்போது சங்கு ஊதி விளக்கு ஏத்தி இழை ஏத்தி எடுத்துக் கொள்ள வேண்டும். பணியாரச் சட்டி அடுப்பில் வைக்கும் போதும் சங்கு ஊத வேண்டும். பணியாரம் சுட்டு முடித்து சட்டி இறக்கி வைக்கும் போதும் சங்கு ஊத வேண்டும். பணியாரம் சுடும் அடுப்பு கேஸ் அடுப்பாக இருந்தாலும் மாக்கோலமிட்டு பணியாரச் சட்டி அடுப்பில் வைக்க வேண்டும்.

மாமானார் அல்லது மாமனாருக்கு அப்பச்சி தலைப்பாகை கட்டிக் கொண்டு பிள்ளையார் முன்பாக தடுக்கில் அமர்ந்து பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்து, நெய்வேத்தியம் பண்ணி பிறகு வாரிசுப்படி, வயது வாரியாக இழை ஏத்தித் தருவார்கள். நாம் பெரியவர்களையும், பிள்ளையாரையும் விழுந்து வணங்கிவிட்டு, இழையைப் பத்திரமாக தீப ஒளியோடு வாங்கி, **தீப ஒளியுடன் சாப்பிட வேண்டும். ஒளியை ஊதக்கூடாது. நூலைத் துப்பக் கூடாது**. அவசியம் இழைநூல் சாப்பிட வேண்டும். நம் வயிற்றில் பிள்ளை வளர்ந்தால் பிள்ளைக்கும் இழை எடுத்துத் தருவார்கள். நாம் இரண்டு இழை வாங்கிச் சாப்பிட வேண்டும். இழை 5 அல்லது 7 என்று அவரவர் குடும்ப உறுப்பினர்களைப் பொறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இழை எடுத்துத் தருபவர்கள் வீட்டில் உள்ள அனைவருக்கும் எடுத்துத் தந்த பிறகு பிள்ளையார் இழை ஒன்று கடைசியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இழை எடுத்துத் தருபவர்கள் மாமனார் அல்லது மாமனாருக்கு அப்பச்சிக்கு வெற்றிலை பாக்கு வைத்து தாம்பாளத்தில் ரூபாய் வைத்துக் கொடுத்து மரியாதை செய்வது நம்குல வழக்கம்.

இப்பொழுது பிள்ளையார் நோன்பு அரிசி, பருப்பு, கருப்பட்டி, வெல்லம், நெய் அனைத்தும் முறைச்சிட்டைப்படி கல்யாண வீட்டில் வைக்கச் சொல்லி வாங்கிக் கொள்கிறார்கள். நம் சிட்டைப்படி அவரவர்கள் செய்து வருகிறோம். நம் குலப் பெருமை காக்கும் சீர்மிகு திருவிழா வெளியூர்களிலும், வெளிநாட்டிலும் வாழுகின்ற நம் நகரத்தார் பெருமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்து ஒரு இடத்தில் ஒன்றுகூடி பெரியவர்கள் மூலம் இழை எடுத்து இந்த விழாவைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். நம் ஊரில் (செட்டிநாட்டில்) வயிரவன்பட்டியில் பல பெரியவர்கள் இழை எடுத்து அனைவருக்கும் தருவார்கள். நம் சந்ததிகள் அனைவரும் கொண்டாட இந்தக் கட்டுரை உதவ வேண்டி இந்தக் கட்டுரையை எழுதி உள்ளேன்.

வாழ்க நம் சமுதாயம்! வளர்க நம் நகரத்தார் ஒற்றுமை!

Koviloor Digital Library



பிள்ளையார் நோன்பு

பழ. மீனாள், தேவகோட்டை

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும்தா." - ஔவையார்.

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"- திருவள்ளுவர்

முன்னுரை

'அ'கரம் எப்படி எழுத்துக்களுக்கெல்லாம் முதன்மையானதோ, அதைப் போல் கடவுள்களுக்கெல்லாம் முதன்மையானவர் நம்முடைய பிள்ளையார் அப்பச்சிதான். அவர் பொற்பாதங்களை வணங்கி எடுக்கும் எந்த ஒரு செயலுக்கும் நமக்கு வெற்றி நிச்சயம். முதலில் குறிப்பிட்ட பொன்மொழி நம் நகரத்தார் மக்களுக்கு சாலப் பொருந்தும். மிகுந்த தெய்வ பக்தியும் தமிழ்ப் புலமையும் பெற்றுள்ளதால் நாம் உலகம் போற்றும் நகரத்தார் பெருமக்களாக விளங்கி வருகின்றோம்.

வடிவம் மற்றும் பிறப்பு :

பிள்ளையாரை வணங்கினால் எல்லா தெய்வங்களையும் வணங்கிய பலன் உண்டு. பிள்ளையார் இல்லாத இடம் இல்லை. விநாயகர் ஓங்கார வடிவானவர். முப்பத்திரண்டு விதமான விநாயகர்களும், அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி தத்துவங்களும் உண்டு. 'வி' என்றால் சிறப்பு; நாயகன் என்றால் தலைவன் என்று பொருள். தன்னிகரில்லாத சிறந்த தலைவன் என்பது அர்த்தமாகும்.

திருக்கயிலாய மலையில் மந்திர சித்திர மண்டபத்தில் பார்வதியுடன் பரமேஸ்வர் எழுந்தருளினார். அங்கே ஏழு கோடி மந்திர சித்திரங்கள் பொறிக்கப் பெற்றிருந்தன. அவற்றின் நடுவில் சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் என்ற இரு பிரணவ மந்திரங்கள் இருந்தன. அந்த இரு பிரணவங்களும் ஒன்றோடொன்று மருவ அப்பிரணவங்களிலிருந்து பிரணவாகார முகத்துடன் விநாயகர் பெருமான் அவதரித்தார்.

விநாயகர் சஷ்டி வர காரணம் :

சஷ்டி விரதம் நம்முடைய முருகப்பெருமானுக்கே உற்றது என்றாலும் விநாயகருக்கும் இவ்விரதம் சாலப் பொருந்தும். புராணங்களில் இவ்விரதம் வர ஒரு காரணம் உண்டு. இது பலருக்கு தெரிய வாய்ப்பில்லை. சிவபெருமானும், பார்வதி அம்மையாரும்

Koviloor Digital Library

சதுரங்கம் விளையாடும் பொழுது, விஷ்ணு பகவான் தவறாக சிவபெருமானுக்குச் சாதகமாகக் கூறிவிட்டார். இதனால் கோபம் அடைந்து பார்வதி தேவியார் விஷ்ணு பகவான் மீது சாபம் விடுத்தார். அப்பொழுது சிவபெருமான் விஷ்ணுவிடம் கஜமுகாசுர வதம் செய்த நாளில் அவர் இந்த சாபத்தில் இருந்து விடுபெறுவார் என்று கூறினார். அவ்வாறே விஷ்ணுவும் அந்த சாபத்தில் இருந்து விடுபெற்றார். விநாயகர் கஜமுகாசுரரை வதம் செய்த பின் திரும்பும் பொழுது மகாவிஷ்ணு அவரை சந்தித்து அந்த சாபத்தில் இருந்து விடுபெற்றார். அவ்வாறு விநாயகரும் விஷ்ணுவும் சந்தித்த நாள் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் சேர்ந்த மார்கழி மாதம். அந்த நாளில் விஷ்ணு ஒரு விரதம் அனுஷ்டித்தார். அந்த விரதத்தை விநாயக சஷ்டி விரதம் என்று அழைத்தார். எவர் ஒருவர் அந்த விரதத்தை கடைப்பிடிக்கிறார்களோ, அவர்கள் எல்லா கஷ்டங்களில் இருந்தும் விடுபெற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வார்கள் என்பது ஐதீகம். விநாயகர் கோயில்களில் பார்கவ புராணம், (பெரும் கதை) விநாயகர் கவசம் இவ்விரண்டையும் கார்த்திகை மாதத்தில், கிருஷ்ண பக்ஷம் பிரதமையில் ஆரம்பித்து சுக்ல பக்ஷம் விநாயகருக்கு சுக்ல பக்ஷம் சஷ்டியில் ஒரு சிறப்பான வழிபாட்டை மேற்கொண்டனர். இவ்வழிபாட்டை 21 நாட்களுக்கு அனுஷ்டித்தனர்.

நகரத்தாரின் பிள்ளையார் நோன்பு விளக்கம்:

நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய நாம் தனவணிகப் பெருமக்கள். தொன்றுதொட்டு பிள்ளையார் வழிபாட்டை முறைப்படி செய்து வருகிறோம். நம் மரபினர் அனைவரும் பொதுவாக வைத்து வணங்கும் விநாயகரை 'மரகத விநாயகர்' என்று கல்வெட்டுகளும் வரலாற்று நூல்களும் குறிக்கின்றன. எடுத்த காரியங்கள் இடையூறின்றி நிறைவேறுதற் பொருட்டுச் செய்யத் தக்க விநாயக வணக்கம் ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலையாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது போல நகரத்தார்களாலும் மேற்கொள்ளப் பெறுமாயின் சிறப்பாக ஆண்டுக்கொரு முறை மார்கழி மாதத்துச் சுக்கிலபட்ச சஷ்டி நாளில் பிள்ளையார் நோன்பு என்னும் பெயரில் குடும்ப விரதமாக வழிபாட்டை நகரத்தார்கள் நிகழ்த்தி வருகிறார்கள். இவ்வழிபாடு எந்தக் காலத்தில் இவர்களால் மேற்கொள்ளப் பெற்றது என்று குறிப்பிட முடியாத பழைய காலத்திலிருந்து நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாடு குடும்ப ஒற்றுமை மற்றும் பல பிணக்குகளிலிருந்து விடுபெற்று ஒற்றுமை ஆவதற்கு துணையாய் இருக்கிறது. பாரத நாட்டு மக்கள் அனைவருக்கும் பொங்கல் விழா எப்படி இன்றியமையாததோ, அப்படியே நகரத்தார்களுக்குப் பொங்கல், பிள்ளையார் நோன்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. புராணங்களில் பிள்ளையார் வழிபாட்டிற்குச் சிறந்தனவாக ஆவணி மாதத்துப் பூர்வபட்ச சதுர்த்தியும் மார்கழி மாதத்துப் பூர்வபட்ச சஷ்டியும் குறிக்கப் பெறுகின்றன. முன்னையது விநாயகர் பெருமான் திருஅவதார நாள்.

Koviloor Digital Library

பின்னையது அவர் கஜமுகா சூரசம்ஹாரம் செய்து அடியார்களைக் காத்த நாள். இவ்விரண்டு நாட்களிலும் வழிபாடு செய்வது இன்ப ஆக்கம் துன்ப நீக்கம் இரண்டையும் பெறுவதற்கென்று எனப் பெரியவர்கள் சொல்வார்கள்.

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு முறை சமூகம் முழுவதிலும் ஒரே அமைப்பில் இருப்பதால் நோன்பு நாளன்று மாலையில் விநாயகப் பெருமானது திருவுருவத்தை வீட்டில் புனிதமான இடத்தில் எழுந்தருளிவித்து, விநாயகப் பெருமானுக்கு அதிக விருப்பமான எள், நெல் முதலிய பொரி வகைகளும் பணியாரம் என்று நகரத்தார்களால் குறிப்பிடுகிற அப்பம் வகைகளும், வெல்லப் பாகுக் கடலை உருண்டை முதலியனவும் ஆச்சாரத்துடன் தயாரித்து நிவேதித்து, ஆவாரம் பூவால் செண்டு கட்டிச் சுவாமி திருமுன் வைத்து ஆவாரம் பூவினாலேயே அர்ச்சித்து வேதமும் ஓதித் தோத்திரம் செய்து, விரத நாள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நூலிழையாக இருபத்தொரு நூலிழைகள் கொண்ட திரியை வெல்லம் சேர்ந்த அரிசிமா, திரட்டுப்பால், வாழைப்பழம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றில் சேர்த்துப் பசு நெய் விளக்கில் ஏற்றி, பெரியோர்கள் கைகளால் பெற்று உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.

முடிவுரை :

நகரத்தார்கள் தங்கள் வீட்டிலேயே விநாயகரை பிரதிஷ்டை செய்து நிவேதனம் படைத்து, இழை எடுத்துக் கொண்டு வழிபடுவது சாலச் சிறந்தது. இதனால் இல்லம் செழிக்கும், இன்னல் தீரும்.

பிள்ளையார் பாடல்கள்

கீழே உள்ள பாடல்களை இழை எடுப்பதற்கு முன்பு அனைவரும் பாட வேண்டும். ஒருவர் பாட மற்றவர்கள் சேர்ந்து பாடுவது மிகவும் நல்லது.

1. வேழமுகம்

குறள் - காப்பு



வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்

வெற்றி முகத்து வேலவனைத் தொழ
புத்தி மிகுத்து வரும்

வெள்ளிக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி யோடுந் தொடர்ந்து வினைகளே

அப்பமுப் பழமும் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே.

Koviloor Digital Library

உ. பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜெய ஜெய
சீரிய யானைக் கன்றே ஜெய ஜெய
அன்புடன் அமரரைக் காப்பாய் ஜெய ஜெய
ஆவித் துணையே கணபதி ஜெய ஜெய
இண்டைச் சடைமுடி இறைவா ஜெய ஜெய
ஈசன் தந்தருள் மகனே ஜெய ஜெய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜெய ஜெய
ஊர்வ நவ சந்தி யுகந்தாய் ஜெய ஜெய
என்பெரு மானே இறைவா ஜெய ஜெய
ஏழுல குந்தொழ நின்றாய் ஜெய ஜெய
ஐயா கணபதி நம்பியே ஜெய ஜெய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜெய ஜெய
ஓங்கிய வானைக் கன்றே ஜெய ஜெய
ஔவிய மில்லா வருளே ஜெய ஜெய
அஃகர வஸ்து ஆனவா ஜெய ஜெய
கணபதி என்வினை களைவா ஜெய ஜெய
ஙப்போல் மழுவொன் றேந்தியே ஜெய ஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெய ஜெய
ஞாபநம் பினர்பா லடியே ஜெய ஜெய
இடம்பட விக்கின விநாயக ஜெய ஜெய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெய ஜெய
தத்துவ மறைதரு வித்தகா ஜெய ஜெய
நன்னெறி விக்கின விநாயகா ஜெய ஜெய
பள்ளி லுறைதரும் பிள்ளாய் ஜெய ஜெய
மன்று ளாடும் மணியே ஜெய ஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெய ஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெய ஜெய
இலவக் கொம்பொன் றேந்தியே ஜெய ஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெய ஜெய
அழகிய வானைக் கன்றே ஜெய ஜெய
இளமத யானை முகத்தாய் ஜெய ஜெய
இரகுபதி விக்கின விநாயகா ஜெய ஜெய
அனந்தலோ டாதியி லடிதொழ வருளே!

பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.

மேற்கண்ட பாடல்களைப் பாடி முடித்தவுடன் இழை எடுக்கவும்.

ANDAVA... LIBRARY, KOVILOO... 38376

Koviloor Digital Library



Koviloor Digital Library

யாம் இருக்கும் இடத்தில் சகல செல்வங்களும் கற்பக விருட்சமாய் வளரும்



அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்வு வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெல்லாம் விளைதல் வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வம்
களஞ்சியத்திருக்கை சென்று
பொற்பாதம் பணிந்து பாரீர்
பொய்யில்லை கண்ட உண்மை.

கவியரசு கண்ணதாசன்

முல்லை
பதிப்பகம்

323/10, கதிரவன்காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை-40
போன் : 9840358301 E-mail: mullaipathipagam@yahoo.com